

# திரித்துவோதயம்

# 2012

## தமிழ் இலக்கிய மன்றம்

திரித்துவக் கல்லூரி

கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி திரித்துவக் கல்லூரி

## தமிழ் இலக்கிய மன்றம்

## மகிழ்வுடன் வழங்கும்

## "முத்தமிழ் விழா - 2012"

பிரதம அதிதி
கலாநிதி ப. சரவணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், விஞ்ஞானபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

காலம் : 17.02.2012
நேரம் : பி.ப. 4.30 மணி
இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார்"

திரித்துவோதயம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்ததனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

-புரட்சிக்கவி பாரதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TRINITY COLLEGE, KANDY

**College Song**

It's good to see the School we knew.
The land of youth and dream.
To greet again the rule we knew.
Before we took the stream'.
Though long we've missed the sight of her.
Our hearts may not forget:
We've lost the old delight of her.
We keep her honor yet.

The stars and sounding vanities.
That half the crowd bewitch.
what are they but inanities..
To him that treads the pitch?
And where's the wealth. I'm Wondering.
Could buy the cheers that roll.
When the last charge goes thundering.
Towards the twilight goal.

The men that tanned the hide of us.
Our daily foes and friends.
They shall not lose their pride of us.
However the journey ends.
Their voice to us who sing of it.
No more its message bears.
But the round world shall ring of it..
And all we are be theirs.

To speak of fame a venture is.
There's little here can bide,
But we may face the centuries..
And dare the deepening tide;
For though the dust that's a part of us.
To dust again be gone..
Yet here shall beat the heart of us,
The School we handed on.

We w ill honor vet the School we knew..
The best school of all:
We w ill honor yet the rule we knew.
Till the last bell call.
For working days or holidays.
And glad or melancholy days.
They were great days and jolly days,
At the best School of all.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**வாழ்த்து முரசு**

பிரதம அதிதியின் வாழ்த்து (I)
Message from the Principal (II)
Message from the Vice Principal (III)
Message from the Chaplain (IV)
Message from the Upper School Head Master (V)
Message from the Middle School Head Master (VI)
பொறுப்பாசிரியரின் வாழ்த்து (VII)
தலைவரின் வாழ்த்து (VIII)
செயலாளரின் வாழ்த்து (IX)
இதழாசிரியர்களின் வாழ்த்து (X)

**மாணவர் முரசு**

கல்வியின் மகத்துவம் (02)
அன்னை (03)
கல்வியைக் கற்றால் வெற்றி (04)
ஊடகங்களும் தமிழ் மொழி வளர்ச்சியும் (05)
ஒழுக்கம் விழுப்பம் தரலான் (08)
நல்லொழுக்கம் கொண்டிருந்தால் நீங்களே சிறந்த செல்வம் (09)
கடமையைச் செய் (10)
போதும் யுத்தம் (11)
25ம் நூற்றாண்டில் உலகம் (12)
ஆசிரியர்களை மதிப்போம் (14)
இளமையிற் கல்வி (15)
எதுவெல்லாம் (17)
வேதனைகளை மறந்து சாதனையில் கலைவிழா (18)
சிவப்புமை (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா (20)
மதித்துக்கல் மகிமைகள் வரும் (21)
கல்வி - எவ்வழி? (22)
நினைவாற்றல் (24)
அதிபர் ஆசிரியர் கற்பிக்க வேண்டியவை
மாணவர் கற்று கடைபிடிக்க வேண்டியவை (25)
நினைவாற்றலை அதிகரிக்க மாத்திரைகள் அவசியமா? (27)
கல்வியின் மகத்துவம் (29)
பழமொழியின் விளக்கம் (31)
தனிமனித விழுமியம் எனும் மேம்பாட்டில் தமிழ் கல்வியின்
முக்கியத்துவம் (33)
சூரியக் குடும்பம் (35)
மேன்மைதரும் யோகாசனங்கள் (37)
ஒரு மன்றாடல் (39)

**ஆசிரியர் முரசு**

நாடகக்கலைஞன் நவாலியூரான் நா. செல்லத்துரை (43)
போதி தர்மன் போன்றவர்களை மீள உருவாக்குவது சாத்தியமா? (48)
கண் திறந்திட வேண்டும் (52)
மனித வாழ்வின் மனவெழுச்சிகளின் தாக்கம் (54)

**சங்க முரசு**

தமிழ் இலக்கிய மன்றம் - செயற்குழு (59)
தமிழ் இலக்கிய மன்றத்தின் பரிணாமம் - சில பதிவுகள் (60)
ஆசிரியர் குழு (73)
பாடசாலை மட்ட தமிழ் தனிப்போட்டி முடிவுகள் (77)
செயலாளர் அறிக்கை (79)
Achnowledgements (81)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து முரசு



திரித்துவோதயம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
# 2012

## பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி....

'திரித்துவோதயம்' முத்தமிழ் பணிக்கு சான்று பகரும் நற்திரு நாமம். 93வது அகவையில் தடம் பதிக்கும் தமிழ் இலக்கிய மன்றத்தின் இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்க் கலை விழாக்களைச் சிறப்புற நடாத்தும் ஒரு சில மும்மொழிக் கல்லூரிகளில், பாரம்பரியமும் கல்வி மேன்மையும் கொண்ட திரித்துவக் கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கின்றது. மாணாக்கரின் வினைதிறனுக்கு ஒரு களமாகவும், களஞ்சியமாகவும் முறையே முத்தமிழ்விழாவும் திரித்துவோதயமும் திகழ்கின்றன.

எமது மொழியும் கலாசாரமும் பல சவால்களை எதிர்கொண்டுள்ள இக்கால கட்டத்தில், திரித்துவக் கல்லூரி மாணவர்களினதும், அவர்களுக்கு பின்புலமாக உள்ள ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தமிழார்வலர்களது பணி அளப்பரியது. முக்கியமாக, பொறுப்பாசிரியை திருமதி. மனோகரி மயூரன் அதி பாராட்டுதலுக்குரியவர்.

மலர் வெளியீட்டுடன் இணைந்த முத்தமிழ் விழா சிறப்புற எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

**கலாநிதி**
**ப.சரவணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
விஞ்ஞான பீடம்,
பேராதனை
பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
## 2012

### MESSAGE FROM THE ACTING PRINCIPAL.

It is my pleasure to send this message to the souvenir published as a part of the Tamil Literary Union day.

Tamil literature has a rich tradition which spans over more than 2000 years and is particularly famous for its poetic tradition as well as for its epics, philosophical works and secular flavour. The works of the Sangam period, known as Sangam literature. at the turn of the first millennium are the most ancient and considered very important. It is during this period that some of the grandest of Tamil literary classics were authored well patronized by the imperial empires. Tamil literature is unique and thus has become the subject of study by scholars.

The enthusiasm of the students in organizing the society day is commendable and well augurs for the continuous existence of unity, harmony and interaction.

I wish the Tamil Literary Union all success in its activities and look forward to a programme rich in Tamil literature.

RESPICE FINEM

**Principal**
Brig. W.G.K. Aryaratne



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
# 2012

## உப அதிபரின் ஆசிச்செய்தி

திரித்துவக் கல்லூரியின் தமிழ் இலக்கியமன்றம் தொடர்ச்சியாக பதின்மூன்றாவது தடவையாக வெளியிடும் இச்சஞ்சிகையானது தமிழ் அன்னையின் மடி தவழ்ந்து எமது கரங்களை அலங்கரித்துக்கொண்டிருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். குழந்தைச் சிறார்கள் தொடக்கம் அறிஞர்களின் ஆக்கபூர்வமான படைப்புக்களை சுமந்து வரும் இச்சஞ்சிகையானது கல்விசார் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் சந்தேகமுமில்லை.

மேலும் கண்டி திரித்துவக் கல்லூரியானது தனது 93வது முத்தமிழ்விழாவை இனிதே கொண்டாடுவதை முன்னிட்டு நான் பேருவகை அடைகின்றேன். பல்லின, பல்மத, பன்மொழி மாணவர்கள் கல்வி பயிலும் எமது கல்லூரியின் தமிழ்மன்றம் ''குன்றின் மேல் தீபம் '' போல தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்தியம்புவதில் வெற்றிகண்டுள்ளது. இவ்விழாவை வெகுவிமரிசையாகவும் ஆக்கபூர்வமாகவும் கொண்டாட பல்வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த மன்றத்தின் பொறுப்பாசிரியை திருமதி மனோகரி மயூரன் அவர்கட்கும், தமிழ் இலக்கிய மன்றத்தின் சிரேஷ்ட ஆலோசகர் இரா.சிவலிங்கம் அவர்கட்கும் மற்றும் மாணவர் செயற்குழு உறுப்பினர்கள் யாவர்க்கும், எனது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலை, கலாசாரம், விஞ்ஞானம், தத்துவக் கருத்துகளை தன்னகத்தே தாங்கிக் கொண்டு சஞ்சிகை வானிலே தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட இந்த அரிய சஞ்சிகையானது மாணவர்கள் மத்தியில் மென்மேலும் பிரபல்யம் அடைந்து வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

**E.G.J. கனகசபை**
**உபஅதிபர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் எமது ஆசிரியர் குழாத்தின் சிறந்த வழிகாட்டலுக்கமைய, தொகுப்பட்ட நிகழ்ச்சிகள் மலையக சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைகின்றது.

மேலும் முத்தமிழ் விழாவானது தமிழ் அன்னைக்கு பெருமை சேர்த்து மாணவர்களின் படைப்புக்களையும் ஆற்றல்களையும் வெளிக்கொணர எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

''வாழ்க தமிழ்மொழி வளர்க தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வாழியவே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
## 2012

MESSAGE FROM THE CHAPLAIN

It is with utmost delight that I penning down of best wishes and congratulations for the 93rd Kalai Vizha. Kalai Vizha is undertaken surpassing hine decades of cultural and linguistic excellence. The Tamil Literery Association has been a mainstay of hunting and educating young prospects at Trinity College throughout her exister and it is with pleasure we congratulate teacher in charge the committee and all the students with the proceedings leading to the Kalai Vizha, and the publication of this magazing whilst admiring their commitement we thank all past teachers and students who have contributed to the TLU during the past years. It is said that literature and all artistic expressions of same is the vehicle of culture and history. May the TLU of Trinity College shine and burn brightly giving light to All who tread in her path.

**Bro. Rasika Abeysinghe**
**Chaplain**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
## 2012

### Message from the Head Master
**Upper School**

It is with much pleasure I send my good wishes to the Tamil Literary Union at their annual event MUTHTHAMIL VIZHA - 2012

Tamil Literary Union has been in existence at Trinity College for over 9 decades and has contributed immensely towards enhancing multi-cultural spirit at Trinity.

It's my sincere hope that the Tamil Literary Union will continue to develop the Tamil Literary and culture of our country.

I wish the Tamil Literary Union all success in their future endeavors.

**Mr.Ruwan Jayarathne**
**Head Master**
**Upper School**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Head Master Middle School


**Mr. Palitha Senaratna**
**Head Master**
**Middle School**


I send this message of good wishes with a great pleasure to the magazine to be published by the Tamil Literary Union of Trinity College Kandy, on the occasion of its 93rd anniversary.

I take this opportunity to congratulate the union on its worthy reward of steady progress through these years. The members of the Tamil Literary Union play a quiet commendable role to maintain harmony among the students of all ethnic and religious groups in the college. The cultural aspect of the 'Muththamizhl Vizha 2012' has enlighten and helped ta broaden our vision of life and society"

I am confident that the TLU will record greater programms in the years to come and wish all the members every success in their future endeavors.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
## 2012

### தேமதுரத் தமிழோசை எங்கும் ஒலிக்கட்டும் ...




ஸ்ரீமதி. மனோகரி மயூரன்
**பொறுப்பாசிரியை**

கல்வித்துறையில் தடம்பதித்து, வீறுநடை போடும் திரித்துவக் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றமானது தொன்மையான உயிர்த்துடிப்புள்ள மன்றமாகும். 93வது அகவையில் 13வது திரித்துவோதய சஞ்சிகையுடன் அரங்கேறும் முத்தமிழ் விழா, மிகச் சிறப்பாகவும் கலாசாரமாகவும் கொண்டாடப்படுவதில் அகமகிழ்வடைகின்றேன்.

இலக்கிய மன்றச் செயற்குழுவினர்களுடன், கல்லூரி நிர்வாகத்தினர்கள், சகல ஆசிரியர்களும் இணைந்து மகத்தான மானுட ஆற்றல்களை வெளிக்கொணரும் செயற்பாடுகளில் ஈடுபடுவது எமது கல்லூரியின் சிறப்பம்சமாகும். இதற்குச் சான்றாக கல்லூரி மட்டத்தில் மட்டுமல்லாது மாவட்ட, மாகாண, அகில மட்டங்களில் எமது மாணவர்கள் வென்றெடுக்கும் பதக்கங்களையும் பரிசில்களையும் குறிப்பிடலாம்.

மாணவர்களின் செயற்றிறமைகளை தடம் பதிக்கும் 13வது "திரித்துவோதயம்" எமது மன்ற இதழாசிரியர்களான M.S.M. அக்ரம், R.மதுஷான், A.K.கௌரிஷங்கர் ஆகியோரின் சிகிச்சையில் பல்சுவைப் படையல்களாக மலர்வதற்கு ஆசிர்வதிக்கிறேன்.

மேலும், முத்தமிழ் செம்மை சீர்குலையாது நவீனமயப்படுத்தலையும் உள்வாங்கி அரங்கேற்றும் இவ்விழாவில் மன்றத் தலைவரான M.U.M. ஹுமைடின் பங்களிப்பு காத்திரமானது. அத்துடன், மன்ற உபதலைவர் M.I.M. இன்ஷாவ் செயலாளர் R.M. தில்ஷான் ஆகியோரின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாகும்.

கல்லூரி உபஅதிபரான திரு. E.G.J. கனகசபை அவர்களது வழிப்படுத்தலும் யதார்த்தபூர்வமான ஒத்துழைப்பும் எமது மன்றத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். அத்துடன், ஆசிரியர்களின் காத்திரமான ஆலோசனைகளும் ஒத்துழைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழாவை மெருகேற்றியுள்ளது. தமிழர்களின் சிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். இதனை திரித்துவப் பெற்றோர்கள் மிகச்சிறப்பாக இவ்விழாவில் வெளிப்படுத்தும் வள்ளல் தன்மை சிலாக்கியமானது.

இவ்வளவு சிறப்புக்களையும் தனதாக்கி, மணம்கமழும் முத்தமிழ் விழாவை பேராதனைப் பல்கலை கழகத்தின் ஆசான் Dr. P. சரவணகுமார் அவர்கள் பிரதம அதிதியாக வருகை தந்து கௌரவப் படுத்துவதனால் மன்றம் பெருமையடைகின்றது. இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகள் யாவற்றிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து இடர்வரும் வேளையில் எமக்கு உரம் சேர்த்து, துடிப்பைக் கொடுத்துதவிய எமது கல்லூரி அதிபர் மற்றும் நிர்வாகத்தினர்கள், ஆசிரியர்கள், செயற்குழுவினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் இறைவன் அருளை வேண்டி முத்தமிழ் விழாவை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

''எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
## 2012

### தலைவரின் வாழ்த்துச் செய்தி

திரித்துவக் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் அதன் 93வது வருடத்தை பூர்த்தி செய்யும் இத் தருணத்தில் வெளியிடப்படும் 13வது திரித்துவோதய இதழுக்கு எனது வாழ்த்து செய்தியை எழுதுவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

1919ஆம் ஆண்டு தனது சேவையினை ஆரம்பித்து இயல், இசை, நாடகம் என்பவற்றை ஒன்று சேர்த்து வருடாந்தம் எமது பாடசாலையில் இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படும் முத்தமிழ் விழா இம் முறையும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இத்தகையதோர் சிறந்த நிகழ்ச்சி எனது தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறுவதில் பேருவகை யடைகின்றேன்.

எமது மன்றத்தின் சகல செயற்பாடுகளுக்கும் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் எம்முடன் உழைத்த மன்ற பொறுப்பாசிரியை ஸ்ரீமதி மனோகரி மயூரன் அவர்களையும் காத்திரமான ஒத்துழைப்பு நல்கிய கல்லூரி உபஅதிபர் E.G.J. கனகசபை அவர்களையும் நன்றியுடன் நினைவுகூறுகிறோம். சகல வழிகளிலும் எம்முடன் உழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசிர்வதிப்பார்.

பல தசாப்தங்களாக எமது பாடசாலை இலக்கிய மன்றத்தின் விரைவும் விழிப்பும் கொண்ட பங்கேற்புகள் தொடர இறைவனை வேண்டுகின்றேன்.

**தலைவர்**
எம்.யு.எம்.ஹுமைட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
# 2012

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

“எண் என்ப ஏனைய எழுத்து என்பன இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு” எண், எழுத்து என்று சொல்லப்படும் இரு வகை கலைகளையும் எமக்கு கண்கள் போன்று வழங்கிடும் திரித்துவக் கல்லூரியின் முத்தமிழ் விழாவை வெகு விமர்சையாக ஒழுங்கு செய்திருக்கும் தமிழ் இலக்கிய மன்ற செயலாளர் என்பதில் பெருமகிழ்வடை கின்றேன்.

தமிழ்க் கலைகளை அரங்கேற்றுவதற்கு திரித்துவக் கல்லூரியின் மேடையே முதன்மையான இடத்தை பெறுகின்றது. அவ்வாறே, மத்திய மலைநாட்டில் மட்டுமல்லாது இலங்கையிலும் சிறப்பான ஒரு இடத்தை பெற்றிருக்கும் திரித்துவக் கல்லூரியின் கலை நிகழ்ச்சிகளும், திரித்துவோதய சஞ்சிகையும் முக்கிய இடத்தை பெறுகின்றன.

**செயலாளர்**
**டில்ஷான் மொஹமட்**

அந்த வகையில் வெற்றிகரமாக 93 ஆவது ஆண்டில் தடம் பதித்திருக்கும் எமது தமிழ் இலக்கிய மன்றத்தில் கலை நிகழ்சிகளுக்கும் திரித்துவோதய சஞ்சிகைக்கும் பேருதவி நல்கிய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு எமது இந்த நிகழ்வுகளை வெற்றிகரமாக அமைத்து கொள்வதற்கு வழிகாட்டியாக அமைந்த எமது பொறுப்பாசிரியை திருமதி. மனோகரி மயூரன் அவர்களுக்கும் எமக்கு சகலவிதங்களிலும் உதவிய பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் எமக்கு நிதி உதவி வழங்கி எம்மை ஊக்குவித்த அனைவருக்கும், எமது தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது திரித்துவக் கல்லூரியின் முத்தமிழ் விழாவும், திரித்துவோதய சஞ்சிகையையும் மென்மேலும் பல்லாண்டு காலம் சுடர்விட வாழ்த்துகின்றேன்.

“ வாழ்க தமிழ்மொழி, வளர்க தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வாழியவே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINITY COLLEGE KANDY
# 2012

**இதழாசிரியர்கள்:**
**எம்.எஸ்.எம்.அக்ரம்**
**ஆர். மதுரஷன்**
**ஏ.கே. கௌரிசங்கர்**

## சிந்தையில் நின்றாடும் .......

நாட்டின் பல்லினப் பண்பாட்டின் சின்னமாகத் திகழும் திரித்துவக்கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்ற கலைவிழாவை கொண்டாடும் இவ்வேளையில், அதன் மகுடமாக 'திரித்துவோதயம்' வெளியிடப்படுவதில் பெருமையடைகிறோம்.

நாட்டின் நாளை தலைவர்களாக எங்களுக்கு, சமூக பாரம்பரியத்தை உணரச் செய்வதுடன் சிந்தனை செப்பனிடலுடக்கும் வழிசமைக்கின்றது. அத்துடன் சவால்களை எதிர்கொள்ளும் திறன், சஞ்சிகையை முழுமைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களை நெறிப்படுத்தும் ஆற்றல், உச்சப்பயன்பாடு ஒருங்கிணைந்த செயற்திறன் என்பவற்றை மேம்படுத்த திருத்துவோதய வெளியீடு பெரிதும் உதவி நின்றது. வாழ்த்தியலிலுள்ள வாழ்த்து செய்திகள் எங்கள் செயற்பாடுகளுக்கு உரமூட்டுவதான அமைவதுடன், மனதில் ஒரு திடத்தையும் துளிரச்செய்கிறது. மாணவரியிலில் தெரிவுச் செய்யப்பட்ட ஆக்கங்களே சேர்க்கப்பட்டுள்ளதால், எமக்கிடையே மொழியாற்றலை மேம்படுத்துவதற்கு களமமைத்துள்ளது. மேலும், மன்ற செயற்பாடுகளின் சுவடாக மன்றவியல் உள்ளது. எமது கல்லூரி உப அதிபர் E.G.J. கனகசபை, பொறுப்பாசிரியை திருமதி. மனோகரி மயூரன் ஒத்துழைப்புடனும் வழிநடத்தலின் கீழும் 'திரித்துவோதயம்' புதுமையுடன் ஒருங்கிணைந்த அனுகுமுறையை மாணவரிடையே செப்பிநிற்கின்றது. அத்துடன் எமது ஆசிரியர் R. பரமேஸ்வரன் எழுதிய தமிழ் மன்ற வரலாறும், வளர்ச்சியும் என்ற ஆக்கம் மன்றத்தின் வரலாற்றை எல்லோர்க்கும் உணர்த்தி நிற்கின்றது.

''தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்பதற்கிணங்க பலதரப்பட்ட விடயங்களை கொண்ட ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேர்க்கப்பட்டு தமிழ்மொழி மூலம் வெளிவரும் குறிப்பிடதக்க சஞ்சிகைகளில் திருத்துவோதயமும் ஒன்றாகும் என்பதே உண்மை.

பட்டை தீட்டிய வைரத்தின் பொழிவுடன் 13வது 'திருத்துவோதயம்' மலர உழைத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், படைப்பாளிகளுக்கும் 2012ஆம் ஆண்டு கலைவிழா மாணவர்கள் இதய பூர்வமாண நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''தமிழனென்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் முரசு



திரித்துவோதயம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் மகத்துவம்

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை” என்கிறார் வள்ளுவர். உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச்செல்வம், மற்றையது பொருட்செல்வம். கல்விச்செல்வம் ஈடு இணையற்றது; நிலையானது; அழிக்கப்பட முடியாதது பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைவடையாத அழையாச்செல்வம் கல்வி ஒன்றேயாகும்.

கல்வி எமது உள்ளங்களுக்கு அறிவெனும் ஒளியைத் தருவதனால் கண் எனப் போற்றப்படுகிறது. கல்வி கற்றுத் தேறியவனே கண்ணுடையவனாகக் கருதப்படுகிறான். இதனையே திருக்குறள் “கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்” என்கிறது.

கல்வியின் சிறப்பினைப்பற்றிப் புலவர்கள் பலர் போற்றிப் பாடியுள்ளனர். “கற்றோருக்கு சென்றி இடமெல்லாம் சிறப்பு, மன்னருக்குத் தன் தேசமல்லா சிறப்பில்லை. எனவே மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்” என்கிறார் ஔவையார்.

“கற்கக் கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என்கிறது திருக்குறள். கல்வியைக் கற்கும் போது ஐயந்திரிபற நாம் கற்க வேண்டும். நமது வாழ்நாளில், பயன்தரும். பல நூல்களை ஆராய்ந்து தெளிந்து கற்க வேண்டும்.

கல்வி கற்றவனையே உலகம் மதிக்கும். தங்கள், பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். “சீனா சென்றேனும் சீர் கல்வி தேடு” என்ற முஹம்மத் நபி அவர் வாக்கிற்கேற்ப அழியாச்செல்வமான கல்வியை நமதாக்கிட முயல்வோமாக!

எம். சப்னி வாஸில்
வகுப்பு - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை

பெற்றெடுக்கும் போது உன் அன்பைப் பார்த்தேன்,
பெயர் வைக்கம் போது உன் அறிவை பார்த்தேன்.
மடியில் வைக்கும்போது உனது மனதைப் பார்த்தேன்,
மன மகிழ கொஞ்சும் உன் மழலைப் பார்த்தேன்.

பால் கொடுக்கும் போது உன்பாசம் பார்த்தேன்,
பசியால் அழும்போது உன் பரிவைப்பார்த்தேன்.
தவறு செய்யும்போது கையில் தடியைப் பார்த்தேன்
தாயே என்னை நீ பெற்றெடுத்ததால் தான் உன்னைப் பார்த்தேன்.

## சுனாமி

26.10.2004 ஆம் திகதி ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள சுமாத்திரா தீவின் வடமுனையில் கடலில்ஏற்பட்ட நிலநடுக்கம் கடலை கொந்தளிக்கச் செய்து ''சுனாமி'' என்ற இராட்சத பேரலைகள் எழுப்பும் தென் ஆசிய நாடுகளை தாக்கியது. மனித சமூகம் இதுவரை கண்டிராத பேரழிவுகளை சுனாமி சில நிமிடங்களில் இந்தோனேசியாவுக்கு அடுத்தப்படியாக இலங்கையில் ஏற்படுத்தி தன்சீற்றத்தை முடித்தது. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற 3 திசைகளிலும் மூவின மக்களும் எவ்வித பாராபட்சமுமின்றி பாதிக்கப்பட்டனர். இலங்கையில் 13000 க்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். பத்துஇலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர். கடலடியின் கீழ் ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாக மேல் மட்ட நீரில் ஏற்படும் கொந்தளிப்பும் கரைநோக்கிய அலை வீச்சம் தொடர்ந்து இடம்பெறக்கூடிய நிகழ்வாகம். கடல் பெருக்கமும் அலைகளின் தொடர் வீச்சம் கிட்டத்தட்ட 30 அடி உயரம் எழுந்து கிராமங்களக்குள் புகுந்துவிட்டது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றத்தினை நாட்டின் தேசிய பேரழிவு என ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார்.

**எம். எச். உஷ்ரிப் அஹ்மத்**
6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியைக் கற்றால் வெற்றி

கல்வி என்பது பயிலுகையில் கசப்பு
கற்றபின்பே இனிப்பு
கல்வி என்பது கற்றவனுக்கு கண்
கல்லாதவனுக்கு புண்

கல்வியை கடப்பது மாணவர் கடமை
கல்வியை கடக்கச் செய்வது ஆசான் கடமை
கல்வியேனும் சோலையிலே
மலர்கின்ற கோடி மலர்கள்

கோடி மலரே மாணவர்கள்
கோர்த்து விடுவோர் ஆசான்கள்
கல்வி என்பது மூன்றெழுத்து
கற்றுப் பயில்வோம் பல எழுத்து

கல்வியில் வேண்டும் அறிவுத்திறன்
வாழ்க்கையில் வேண்டும் பயிலும் திறன்
கல்வியில் பல உயிர்கள்
வாழ்க்கையில் பல மெய்கள்

கல்வி கற்றோன் உலகோடு
கல்வி கல்லாதான் மண்ணோடு
மலரும் மலரின் தேன் போல
கற்றவன் வாழ்வில் வளம் சேரும்

கடலை கடக்கக் கப்பல்
ஆற்றைக் கடக்கத் தோணி
வாழ்வை கடக்கக் கல்வி
கல்வியை கற்றால் வெற்றி

திணை காத்த பெண்ணை
திகழ வைத்தது கல்வியே
திகழ்ந்த பெண்களின் வாழ்வில்
திடீர் மாற்றம் கல்வியே

கல்வியில் வேண்டும் கற்கை
வாழ்வில் வேண்டும் நம்பிக்கை
இருட்டறையில் கிடந்த பெண்ணுக்கு
கல்வியென்னும் நம்பிக்கை

**எல்.கே.தனுஷ்கர்**
8E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களும் தமிழ் மொழி வளர்ச்சியும்

உலகத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு வகையான அம்சங்களும் ஏதோ ஒரு வகையில் ஏனைய விடயங்களுக்கும் தனது பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் ஒவ்வொரு நாட்டினதும் ஊடகங்களின் பங்களிப்பே மிகவும் பிரதானமாகக் காணப்படுகிறது. இவ்வூடகங்கள் தனது மொழி, கலை, கலாசார வளர்ச்சியினை முன்னோக்கிச் செல்கின்றன. தற்போது ஒவ்வொரு ஊடகங்களும் தனது மொழிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. அந்த வகையில் இவ்வூடகங்களினால் தமிழ் மொழியின் வளர்ச்சியை நோக்குவோமானால் மிகவும் சந்தோசமாக உள்ளது.

" அவையில் நாடும் ஏடும் போற்றும் நல்லதொரு மொழியென்றால் அது தமிழ் மொழி " "உலகம் போற்றும் செந்தமிழ் பாவலர் போற்றும் பைந்தமிழ்" என்றெல்லாம் புகழ்ந்துரைக்கின்ற தமிழ் மொழியில் இறைவனே பிழை கூறி விட்டார் என்று " நெற்றிக்கண் திறப்பினம் குற்றம் குற்றமே" என்று அன்று தமிழுக்காக வாதாடிய நக்கீரன் தொட்டு இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களான பாரதி முதல் பாரதிதாசன் வரை தமிழை உயர்த்தி கூறாதவர்களே இல்லை. " மெல்லியலாளர் சொல்லினிமை தரும் இம் மென்தமிழ் வாழ்த்தொலி ஏற்று நிற்கும் தம் வண்ணத்தமிழின் இனிமையை கேட்டு ஆங்கிலேயரான வீரமா முனிவர் கூட தமிழ் மொழியில் பல நூல்களை எழுதியுள்ளார். இவர்களெல்லாம் என்றோ பாடி எழுதிச் சென்ற தமிழ் படைப்புக்கள் இன்றும் எழுத்து வடிவாகவும் ஒலிவடிவாகவும் நம் மத்தியில் காணப்படுவது ஊடகங்களின் மூலகமாகவே என்பதை மறுக்கவே மறுக்க முடியாது "

அந்த வகையில் எழுத்தின் வடிவமாக தமிழ் மொழியின் இனிமையை கண்டறிய பத்திரிகை ஊடகம் பிரதான பங்கு வகிக்கின்றது. தமிழ் இலக்கியங்களைப் பற்றிய கருத்துக்கள், கவிதைகள், கட்டுரைகள் என்பனவும் அற்புதமான வகையில் தமிழ் மொழியின் சொல்லினிமையை காட்டி நிற்கிறது.

பத்திரிகை துறையினால் இன்று ஊடகங்களில் ஏற்படுகின்ற குறைநிறைகளை சுட்டிக்காட்டும் வகையில் சந்தர்ப்பங்கள் வழங்குகின்றது. இதனால் தமிழ் மொழியில் ஏற்படும் பிழைகளை சுட்டிக்காட்டுவதனூடாக மேலும் தமிழ் மொழி வளர்ச்சியடைய ஒரு காரணியாக அமைகின்றது. எனவே பத்திரிகைத்துறையினர் அனைத்து மக்களும் தமிழ் மொழியின் சிறப்பினை அறிந்துக்கொள்ளக்கூடியதாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தின் வடிவில் வாசிக்க தெரிந்த மனிதர்கள் மட்டுமே தமிழ்மொழியை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. ஆனால் ஒலியின் வடிவில் பாவலர் தொடக்கம் பாமரர் வரை அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் பத்திரிகையை தொடர்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றுபவனாக அமைந்துள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுகின்ற பிரதான வானொலி, தொலைக் காட்சி துறைகளிலும் தமிழ் மொழியில் வளர்ச்சியினை காட்டி நிற்கின்றது.

அது மட்டுமின்றி, தொலைகாட்சியின் பங்களிப்பை பார்ப்போமானால், சினிமாவில் தமிழ் வளர்ச்சியையும் காணக்ககூடியதாக உள்ளது. இன்றைய இளைஞர் யுவதிகள் மத்தியில் தொலைகாட்சியே முதலிடத்தை வகிக்கின்றது. எனவே, சிறியோர் முதல் பெரியோர் வரை தனது மொழியறிவை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது.

இன்றைய நவீன உலகில் இணையற்றதாக காணப்படுகின்ற ஆங்கில மொழியே பிரதானமான இடத்தை வகிக்கின்றது. ஏனென்றால், இது உலக மொழி என்பதனால், ஆனாலும் இதனை தொடர்ந்து மொழிகள் இருப்பினும் நமது தமிழ் மொழியே இணையத்தில் இரண்டாவதாக இணைக்கப்பட்ட மொழியாக காணப்படுகின்றது. இதனால் உலகத்தில் எந்த முலையில் தமிழ் நெஞ்சங்கள் வாழ்ந்தாலும் தமிழ் மொழி மூலமே தகவல்களை அனுப்பக்கூடிய வாய்ப்பினையும் பெற்றுள்ளோம். இவ்வாறு காணப்படுகின்ற ஊடகங்களினால் தமிழ் மொழி எந்தளவிற்கு வளர்ச்சியடைகின்றதோ அந்த அளவிற்கு வீழ்ச்சியை நோக்கியும் செல்கிறது. இன்றைய காலகட்டங்களில் தோன்றுகின்ற புதிய ஊடகத்துறைகளில் மொழிக்கலப்பினை ஏற்படுத்தி, தமிழுக்கென சங்ககாலம் தொட்டு நற்பாவலர்கள் தோன்றி மறைந்த காலம் வரை வளர்த்து வைத்த சொல்இனிமை இழிவுப்படுத்துகின்றனர். இதனால் மொழிக்குரிய அழகினை இழக்கின்றது. " மொழி ஓரினத்தின் விழி" என்பார்கள் அந்த விழியே நமக்கு தாய்மொழி, விழியில் ஒரு வலி ஏற்பட்டால் எவ்வாறு வருந்துகிறோமோ அவ்வாறுதான் தமிழ்மொழிக்கும் ஒரு கலங்கம் ஏற்படும் போது வருந்துகின்றறோம்.

தமிழுக்கு அமுதென்று பேர்
அந்த தமிழின்பத் தமிழெங்கள்
உயிருக்கு நேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அன்று பாரதிசாதன் திறம்பட வடித்து வைத்தான். ஒரு கவிதையை, ஆனால் அவ்வாறான அமுதத்திலையே நஞ்சை கலப்பது போல் வேற்று மொழிகளை கலந்து தமிழ் மொழியின் வளர்ச்சிக்க பெரும் பங்கத்தினை விளைவிக்கின்றார் உச்சரிப்பு, எழுத்துப்பிழைகளினாலும் வேறு வேறு அர்த்தங்கள் தோற்றுவிக்கின்றனர்.

தமிழ் துடிப்புமிக்க பாடல்கள் மூலம் தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகைசெய்து தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சி பெற வேண்டுமெனில் ஊடகங்கள் அர்பணித்து கடமையாற்ற வேண்டும்.

அழகுத்தமிழ், ஆசைத்தமிழ், இனிய தமிழ், ஈடகதமிழ், உலகத்தமிழ், ஊற்றுதமிழ், எழில்தமிழ், ஏகதமிழ், ஐதுதமிழ், ஔவைதமிழ்
என்றெல்லாம் கன்னல் மொழியாக்கி கவிதை பாடுகின்ற செந்தமிழ் வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழங்கச்செய்ய வேண்டும். மக்களின் தமிழின் சிறப்பை கொண்டு சேர்க்க வேண்டும்.

ஊடகத்தின் மூலமே ஊற்றெடுக்கும் தமிழ் மொழியை உருவாக்கவும் உயர்த்தவும் முடியும். எனவே ஊடகத்தின் வளர்ச்சியை நோக்கியே தமிழ் மொழியின் வளர்ச்சி அமைந்துள்ளது எனலாம்.

**பிரஷாந்த்**
9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ''

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குச்சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும் என்றாவது மிகையல்ல. இதனாலேயே ஒழுகாப் புகழ்மிகு தொல்காப்பியரும் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளைக்காட்டிலும் பல்வெறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமையவேண்டும். இறந்தும் நாம்வாழ வேண்டுமாயின் இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழவேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும் ''ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயின் அதன்மூலம் புகழீட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள்வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிர்போற் கருதிக்காப்பாற்ற முனைய வேண்டும். இத்தகையோரையே வள்ளுவர் '' ஒழுக்கத்தின் ஒல்கா உரவோர்'' என்கிறார்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர் புத்தர், இயேசு, காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர், அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவிற் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்.

பு.யதுக்கேஸ்
9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லொழுக்கம் கொண்டிருந்தால் நீங்களே சிறந்த செல்வம்!

ஒழுக்கமுடையோர் எனும் சொல் உயர் அர்த்தத்தைக் கொண்டதாகும். அது குறுகிய சொல்லைக் கொண்டதாயின் அகன்ற விளக்கத்தைக் கொண்டதாகும். சிறந்த நல்லொழுக்கத்தை உடையோர் சமூகத்தில் எவருக்கும் தீங்கிழைக்கமாட்டார்.

நல்லொழுக்கத்துடன் சூழலுக்கேற்ப வாழ்வதுமே முறையான வாழ்வாகும். வாழ்விடத்திற்கு ஏற்ப எமது குணாம்சங்கள் மாறவேண்டும். நல்லவர்களிடம் அடக்கமிருக்கும் அவர்கள் வீணாக தம்மைப்பற்றி பேசிபெருமிதம்கொள்ள மாட்டார். நேர்மை நல்லோரின் மிக சிறந்த பண்பாகும். சிலர் சுயநலத்திற்காக நீதி, நெறி தவறுகின்றனர். நாம் நேர்மையாக வாழ்ந்தால் எப்போதும் இறைவன் எமக்கு துணை நிற்பான்.

உற்சாகம், பொறுமை என்பன எம்மிடம் இருந்தால் எதிர்கால இலட்சியத்தை நோக்கி செல்லமுடியும். எது சமூகத்தில் பொறுமை யின்மையே சிலருக்குமத்தியில் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகின்றது. குடும்ப ரீதியில் மட்டுமன்றி, கிராமம், நகரம், நாடுகள் எனும் வகைகளில் கூட பொறுமையின்மையே பாதிப்பு ஏற்படுகின்றது. பொறுமை நல்ல மனிதனுக்கு இருக்கவேண்டிய அருங்குணங்களில் ஒன்றாகும்.

தர்மம் செய்தல் கூட ஒரு மனிதனக்குரிய அடையாளமாகும். நாம் ஏழை, எளியவர்களுக்கு தர்மம் செய்ய வேண்டும். நாம் எடுக்கும் முடிவுகளை புத்திசாதூர்யமாக எடுக்க வேண்டும். சிறியோர் முதல் பெரியோர் வரை இன உறுதிகொண்டிருத்தல் அவசியமாகும். நற்பண்பு உள்ளோரிடம் தயவு, அனுதாபம், பரிவு, மனஅமைதி ஆகிய குணங்கள் அமைந்திருக்க வேண்டும். இது பண்புள்ளவரில் குணமாகும். அடுத்தவருக்காகவும் உழைக்கும் பொதுநலச்செயற்பாடு பிறருக்காக வாழ்தல் ஆகும். தமக்காக மட்டும் உழைத்திருந்தால் எமக்கு சுதந்திரமே கிடைத்திருக்காது எனவே நாம் பிறருக்காக வாழவேண்டும்.

சமாதானம் பெறுமதி மிக்கஒன்றாகும். பெற்றோர் மத்தியிலும் பிள்ளைகள், குடும்பங்கள் மத்தியிலும் சமாதானம் அவசியமாகும். ஒற்றுமை உள்ள இடத்தில் சமாதானம் நிச்சயம் இருக்கும். இப்பண்புகள் அனைத்தும் உயர்குணமாகும். எனவே நாம் இப்பண்புகளை கடைபிடித்து வாழ்ந்து சமூகத்தில் சிறந்த செல்வங்களாவோம்.

**யு.தராதரன்**
9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையைச் செய்

பாடசாலை சென்று கற்றிடு!
பாடத்தை கவனமாய்ப் படித்திடு!
சொல்லி கொடுப்பதை கேட்டிடு!
சோம்பல் கொள்வதை தவிர்த்திடு!

காலையில் தினமும் எழுந்திடு!
காலைக் கடன்களை முடித்திடு!
மாலையில் நன்றாக விளையாடு!
மனதை அமைதியாய் வைத்திடு!

இறைவனை நாளும் வணங்கிடு!
அன்பு கொண்டு வாழ்ந்திடு!
பெருமையாக வாழ உழைத்திடு!
பெற்றோரை என்றும் மதித்திடு!

அன்னையை மாதாவென்று அழைத்திடு!
தந்தையை பிதாவென்று அழைத்திடு!
தாய் சொல்லைக் கேட்டிடு!
தாய்த்தமிழை நீயும் போற்றிடு!

யு.தராதரன்
9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதும் யுத்தம்

எத்திசையும் வெடிகுண்டு சத்தம்
காரணமோ பெரும் யத்தம்
கண்ணீரும் கம்பலையம் தான்
போதும் இந்த யத்தம்

பார்க்குமிடமெல்லாம் இரத்தக்களம்
ஆராய்ந்து பார்த்தால் போர்க்களம்
அங்கும் இங்கும் அழுகை புலம்பல்
போதும் இனி வேண்டும் சமாதானம்

திசைக்குத்திசை தலைவர்களுக்கு
நாட்டை தலைமை தாங்க ஆசை
இதனால் தானோ யுத்தம் பிறந்தது
போதும் போரே நீ போய் விடு

எங்கே நாட்டுப் பிரச்சினைகள்
எங்கே நாட்டுத் தலைவர்கள்
அனைவரும் ஒன்று கூடினால்
தடுக்கலாம் இந்த பெரும் போரை

எங்கும் கீச்சிடும் குரவிகள் சத்தம்
கேட்குமே செவிகளிலே நித்தம்
வண்ண நந்தவனம் இந்த இரத்தின துவீபம்
இப் போரில்லா உலகம் கனவு தானோ.....
போதும் இந்த யுத்தம்.
வேண்டும் நமக்கு சமாதானம்

எம்.ஏ.எம். அகீல்
9E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25ம் நூற்றாண்டில் உலகம்

25ம் நூற்றாணடில் உலகம் பல்வேறு விடயங்களில் முன்னேறி விடும். அந்த முன்னேற்றங்களை யாராலும் நினைத்துக்கூட பார்க்க முடியாது. பலவிதமான கண்டுபிடிப்புக்கள்: அவற்றை பயன்படுத்தும் விதவிதமான மக்கள் சகல வசதிகளோடும் வாழும் மனிதன் அக்காலம் பல நூறு ஆண்டுகளின் பின் தோன்றுவதால் அக்காலத்தை பார்க்க முடியாது துரதிஷ்டநிலை ஏற்படுவது சாத்தியமே! சரி அக்காலம் எப்படியிருக்கும் என இனிப்பார்போம்.

முதல் முதலில் நெருப்பைக் கண்டறிந்த மனிதன் எட்டி வந்த சாதனைகள் ஏராளம். அது வானத்தைப் போன்ற நிகரற்ற அளவுடையது. அன்று ஊர், நாடு, கண்டம் என முறையாகக் கண்டறிந்து வாழ்ந்த மனிதன், அடுத்த படியாகக் கிரகங்களைக் கண்டறிந்து அங்கு வாழவும் தொடங்கிவிடுவான். அது தவிர பல்வேறு இடங்களை உருவாக்கவும் செய்வான். அவன் விண்வெளியில் பறக்கும் நகரங்களையும் சமுத்திரங்களையும் சமுத்திரங்களில் மிதக்கும் நகரங்களையும் அமைப்பான்.

அன்று மருத்துவர்கள் காணப்படமாட்டார்கள். ரோபோக்களே மருத்துவ வேளைகளை பார்க்கும். பல்வேறு நோய்களுக்கு நிவாரணம் கண்ட போதும் புதிதாய் பல்வேறு நோய்கள் கண்டுபிடிக்கப்படும். எயிட்ஸ் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கு நிவாரணம் கண்டபோதிலும் அந்நோய் இருப்போர் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படும்.

அக்காலத்தில் மனிதன் சிந்திக்கும் தொப்பியை (Thinking Cap) பயன்படுத்துவான். அத்தொப்பி ஞாபக மறதி உள்ளோருக்கு பொருத்தமானது. ஊமைகள் நம்மிடம் என்ன கூற நினைக்கின்றனர் என்பதை அறியும் கருவி, கண்ணற்றோர் பார்க்கக் கூடியதோர் கருவி, கால் அற்றவர்களுக்கு செயற்கைக்கால் எனப்பல்வேறு உன்னதனமான கண்டுபிடிப்புக்கள் ஊனமான மனிதனையும் ஊனமற்றவனாகவே உலாவவிடும்.

விண்வெளியில் பறக்கும் விமானங்கள் இன்றைய விமானங்களுக்கு ஒப்பாகாது. காதுப்பூக்களில் Mp4 தொழில்நுட்பம் காணப்படும். அதன் மூலம் தனிமையாக இனிமையான இசையைக் கேட்டு மகிழலாம். மோதிரங்கள், கைகடிகாரம் போன்ற வடிவங்களில் கைதொலைபேசிகள் காணப்படும்.

வேற்றுக்கிரகவாசிகள், மிருகங்கள் போன்றவற்றின் மொழிகளை மொழிபெயர்க்கும் கருவிகளையும் கண்டுபிடித்து அவற்றை அவனுடனேயே வைத்துக் கொண்டிருப்பான். அதன் காரணமாக அவற்றுடன் இலகுவாய்த் தொடர்பாடலை மேற்கொள்வான். பழங்களின் வடிவில் வாகனங்களை அமைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளோனிங் முறை அனுமதிக்கப்படும். உணர்ச்சியுள்ள ரோபோக்கள் காணப்படும். பத்திரிகைகளில் படங்கள் அசையும். அன்றைய மக்களுக்கு மூன்றாவதாக ஒரு கண் காணப்படும். அதாவது பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக நெற்றியின் நடுவே ஒரு கமரா வைக்கப்பட்டிருக்கும் அக்கெமரா அரசாங்கத்துக்குரியது.

அமேசன் காட்டில் உள்ள நீண்ட நாள் வாழக்கூடிய 'பூ' நிலவில் பயிரிடப்படும். கணனிகள் கண்ணாடிக்குள்ளே தெரியும். அதில் நாம் எண்ணும் விடயங்கள் உடனடியாக நம் கண் முன்வரும் ஆப்பிரிக்காவில் பட்டிக்காட்டில் இருப்பவன் கூட ஏதேனுமொரு சமூக வலைப்பின்னலில் (தொடர்பாடல் தளத்தில்) இணைந்திருப்பான். அக்காலத்தில் ஏழைகள் என்ற சொல்லுக்கே இடமிருக்காது. உணவுகளைப் பற்றிக் கூறுப்போனால் நேரடி உணவுகளே (Fast Food) காணப்படும். அன்று பாடசாலைகளே காணப்படாது. இணையத்திலேயே கல்வி கற்பான். கல்வி கற்க வயது எல்லைக் காணப்படாது.

யாரையேனும் பார்க்க எண்ணினால் அவர் முன் ஒரு நொடியில் நிற்பான். அக்காலத்தில் புத்தகங்கள் காணப்பட மாட்டாது. அவை இணையத்தில் மின் புத்தகங்களாகவே காணப்படும். உண்மையைக் கூறப்போனால் 25ம் நூற்றாண்டு சுவர்க்கத்திற்கு சமமானது. அக்காலத்தில் காணப்படும் ஒவ்வொர் மனிதனும் திரைப்படங்களில் வரும் 'அதி சக்தி வாய்ந்த மனிதன்" (Super hero) ஒருவனுக்கு சமனானக் காணப்படுவான்.

கலாசாரத்தில் பாரிய சீரழிவுகள் காணப்படும் ஆட்சி முறைகள் மாறப்படும். மனிதனின் உருவத்தில் பாரிய மாற்றங்கள் காணப்படும் 3ஆம் மற்றும் 4ஆம் உலகபோர் நடைப்பெற்றிருக்கும். இந்தியா உலக நாடுகளில் பார்க்கப் பாரிய வளர்ச்சிக்கண்டிருக்கும். அரேபியாவில் பாரியதோர் பிளவு ஏற்பட்டு புதியதோர் சமுத்திரம் உருவாகும். நவீன சித்திரக்கலை அறிமுகப்படுத்தப்படும். மொழி ஒரு பாரிய பிரச்சினையாய் காணப்படமாட்டாது. நீர் பற்றாக்குறையின் காரணமாக சிறுநீர் நன்னீராக மாற்றப்படும். ஓசோன் படை தேய்வடைந்து அழிவுறும்.

கூறப்போனால் முற்றிலும் உலகம் மாறியிருக்கும். அக்கால மனிதர்கள் எதை வென்றிருந்தாலும் மரணத்தை வெல்ல முடியாதவர்களாயிருப்பர்.

நன்றி

ஆர். எம். ஹுவாமுல் ஹசன்
ஆண்டு 10T (2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களை மதிப்போம்

நாம் அனைவரும் கல்விகற்க வேண்டும். அனைத்து மதங்களும் கல்வியை வலியுறுத்துகின்றது. ''அரசனுக்கு தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு. கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'' என்ற பாடலின் கருத்தை அவதானிக்கும் போது கல்வியின் சிறப்பு தெளிவாகிறது. இக் கல்விச் செல்வமானது வெள்ளத்தால் அழியாது; நெருப்பால் வேகாது; திருடனாலும் திருட முடியாது இத்தகைய தேனைப்பொன்ற கல்வியை எமக்கு ஊட்டுவது எமது ஆசிரியச் செல்வங்களே. இத்தகைய ஆசிரியர்களை நாம் தெய்வம் போல மதிக்க வேண்டும்.

முதலாவது கடவுள் அடுத்தது பெற்றொர், அடுத்து எமக்கு கற்றுத்தந்த குரு என்று பல தமிழ் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய எமது ஆசானை நாம் எவ்வாறு போற்ற வேண்டும்? அவர்களின் ஆசீர்வாதம் இருந்தால் இவ்வுலகில் எதுவும் சாதிக்கலாம். அவர்களின் ஆசிரிவாதத்தை பெற்றுக்கொள்ளவதற்கு முதலில் நாம் அவர்களை தெய்வத்தைப் போல் மதிக்க வேண்டும்.

ஆசிரியரை மதித்தல் எனும் சொல் அவர்களின் சொற்படி நடத்தல், அவர்களுடன் உரியமுறையில் உரையாடல், அவர்களது பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசாதிருத்தல், அவர்கள் எம்முடன் பேசும் போது எழுந்து நிற்றல், அவர்கள் தரும் வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்து வரல் போன்ற நற்கருமங்களின் கலவையாகும். ஆசிரியர்களை மதித்தல் என்பது ஒழுக்கத்தின் முக்கியமான ஒரு பிரிவாகும். நாம் அவர்களை மதிக்காவிடின் சமூகத்தில் எமக்கு உயர்வான நிலை கிட்டாது.

ஆசிரியர்களை மதிப்பலென்பது எமது இரத்தத்தில் கலந்திருக்க வேண்டும். தாய்ப்பாலுடன் ஊட்டப்படல் வேண்டும். இந்த அளவுக்கு ஆசிரியரை மதிக்கும் பண்பானது எம்மிடத்தே வளர்க்கப்படல் வேண்டும். ஆசிரியர்களை மதித்து நடப்பதனால் எமக்கு கிடைக்கும் பயன்களை பட்டியற்படுத்தவே முடியாது. சுருக்கமாக எழுதினால் நாம் அவர்களை மதிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் வாழ்க்கையில் ஒவ்வொரு படி முன்னேறுகின்றோம் எனக் கூறலாம்.

ஆசிரியர்களை மதிப்பது பற்றி பல்வேறு சமயங்கள் வெவ்வேறு விதமாக குறிப்பிட்டாலும் அவற்றின் மையக்கருத்து ஒன்றே அது ''ஆசிரியர்களை மதித்தல்.'' என்பதாகும். ஆசிரியர்களை கேலி பண்ணுதல், அவர்களுக்கு பட்டப்பெயர் சூட்டுதல், அவர்களை மரியாதை செய்யா திருத்தல் என்பன நாம் எம்மில் இல்லாதொழிக்க வேண்டிய சில தீய பழக்கங்களாகும்.

சிறு வயதில் ஒன்றும் எழுதப் படிக்க தெரியாமலிருந்த எம்மை நாளைய சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக ஆக்கக்கூடியவர்களும் எமது ஆசிரியச் செல்வங்களே! ஆகவே நாம் ஆசிரியர்களை மதித்து நடப்பது எம் அனைவரினதும் தலையாய கடமை என உணர்ந்து அதனடிப்படையில் செயற்பட்டு இனிமேலாவது சமூகத்திற்கு சேவை செய்யக்கூடிய ஒரு சிறந்த பிரஜையாக வாழ்ந்து எமது வாழ்வை நல்வாழ்வாக ஆக்கிக்கொண்டு எமது வாழ்வை ஒரு சிறந்த படிப்பினையாகவும் முன்னோடியாகவும் ஆக்கிக் கொள்ள திகழ்வோமாக!

**எம். அகீல்**
10T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி

இளமை என்பது சுதந்தரமானது. கல்வி என்பது சிறப்பு வாய்ந்தது. இவை இரண்டையும் எந்த ஒரு மனிதன் பெறுகிறானோ அவன் பூரணமாக மனிதனாகிறான். கல்வி எனும் மாபெரும் கடலுள் மூழ்கி, நீந்தி அறிவெனும் முத்தை தேடி எடுக்கும் மாணவரின் முயற்சி மெச்சத்தக்கது. அதிலும் சிறப்பாக இளமையில் இதைத் தேடி பெறும் மாணவரின் முயற்சி மிகமிக சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இளமைப்பருவத்தில் மனவேகம், ஞாபகசக்தி, தேவையற்ற விடயங்களில் ஈடுபடாத மனோபாவம் பெரும்பாலும் அமைந்திருக்கும். இளமை என்பது இங்கே சிறியபருவம் என்பது பொருள்படும்.

இதனாலன்றோ எமது முன்னோர் ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' எனக் கூறிப்போனார்கள். எந்த ஒரு செயலுக்கும் அத்திவாரம் உறுதியாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவ்விடயம் சிறப்படையும். அவ்வாறானதே இளமையிற் கல்வி இளமையான மாணவப்பருவம் வாழ்க்கையின் மறக்கமுடியாத, மதிப்பிடமுடியாத சிறப்பு நிறைந்த பருவம். அதிலும் பாடசாலை வாழ்க்கை என்பது பிற்கால வாழ்கைக்கான பலவிதமான அனுபவங்களைப் பெற்றுத்தருவது ஆகும். இக்காலத்தில் பெறும் அனுபவங்கள் இளஞ்சிறார்களின் மனதில் பசுமரத்தாணி போல மிகவும் ஆழமாகப்பதிந்து விடுகிறது.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது முதுமொழி. இதற்கமையவும் எமக்கு ஒன்று தெள்ளத்தெளிவாகத் தெளிவாகிறது. அதாவது ஒரு மாணவனின் எதிர்காலம் அவன் பெறும் இளமைக் கல்வியிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இப்பருவத்தில் வெற்றுத்தாளாகக் காணப்படும் அவன் மூளையானது எந்தவொரு விடயத்தையும் இலகுவாக பதியச் செய்கின்றது. இது கற்றலுக்கு சிறப்பு தருகிறது. இளமையில் கல்வி மட்டுமல்ல விளையாட்டுத்திறனோடு விவேகமற்றமாணவன் அறிவுப்பாதையில் விளக்கமற்றவனாக மறைந்து போகிறான். இளமையில் சரிவர வழிகாட்டப்பட்ட மாணவன் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கால வரலாற்றில் கலந்து நிற்கிறான். இளமையில் கல்வி பெறுவதால் நற்பண்புகள், நல்ல பழக்கவழக்கங்கள், சமயக்கல்வி, தொடர்பாடல் திறன் என்பன வளர்க்கபப்டுகின்றன.

இளமையிற் கல்வியால் ''தேடல்'' எனும் விதிக்கேற்ப அறிவு சார்ந்தனவற்றைத் தேடி அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

''வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகாது, வேந்தராலும்
கொள்ளத்தான முடியாது, கொடுத்தாலும்
நிறைவன்றி குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை, காவலுக்கோ
மிகஎளிய, கல்வியென்றும்
உள்ளத்தே பொருளிருக்கப், புறம்பாகப்
பொருள் தேடியுழல்கின்றாரே "

என தனித்தமிழ் தந்தை மறைமலை அடிகளார் கல்விச் செல்வத்தைப்பற்றிக் கூறியுள்ளார். இத்தகையகல்விச் செல்வத்தை நாம் இளமையில் பெறுவதே சிறந்தது. இதனாலன்றோ உலகில் எங்கும் பாலர் பாடசாலைகள் நடாத்தப்பட்டு பிள்ளைகளுக்கு இளமையில் பெறுவதே சிறந்தது. இதனாலன்றோ உலகில் எங்கும் பாலர் பாடசாலைகள் நடாத்தப்பட்டு பிள்ளைகளுக்கு இளமையில் கல்வித் திறன்களை வளர்க்க வாய்ப்பளிக்கிறார்கள். வள்ளுவர் தனது திருக்குறிளில்.

''ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும்.
தன்மகனை சான்றோர் எனக்கேட்டதாய்''

எனக் கூறியுள்ளார். அதாவது ஒரு தாய் தன்மகனைப் பெற்ற பொழுதிலும் அடைந்த மகிழ்ச்சியை விட அவன் கல்விமான்களில் சிறந்தவனாக விளங்கிடும் போது பன்மடங்க மகிழ்ச்சியடைகின்றாள். இத்தகைய பெருமையினைத் தேடித்தருவது எது?

அதுதான் இளமையிற் கல்வி ஆகும். அறிவின் பயனாகப் பெறும் புகழ் உலகில் நிரந்தரமானது. இளம் வயதைக் காலம் கடந்தபின் பெறமுடியாது. இளமையில் கல்வியம் இதுபொலதான். எனவே நாம் ''இளமையிற் கல்வி'' பெற்று சீரும் சிறப்பும் பெறுவோமாக.

வாழ்க கல்வி
வளர்க இளமையிற் கல்வி

எம்.நவீன்
10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதுவெல்லும்

என்னை கொஞ்சும்
அனுமதி
அமைதி சொரூபம்
அகிம்சை அணுகல்
இவைகளை மிஞ்சி
உனக்கு
என்னை விட
யார் உசாத்துணையாயிருப்பர்?

வெட்டவெளி
சனநெருக்கம்
குடிகளின் இருப்பிடம்
குழந்தைகளின் முற்றம்
இவைகளை குறிபார்க்கும்
உனதான செயல்களுக்கு
சர்வதேச சந்தையில்
உயர் மதிப்பெண்ணாய்
உன்னையே வைக்கின்றேன்

அறிவுக் களஞ்சியங்களில்
சுடுக்கட்டல்களினால்
இவ்விழிவுக் கணங்கள்
இயை பாக்கமாய்

உயர் பக்க சுவர்கள்
குடிசையின் முறிவுண்ட
மூங்கில்கள்
உனதின் உரசல்களுக்கு
இருபக்க மத்தளமாய்

உனதின்
பன்முக வேடந்தாங்களால்
இவ் வையகமும்
கொஞ்சமாய் - என்னை
கெஞ்சி நிற்கிறது

என் சிறகின்
எனது விறைப்பின்
உணர்வுச் சிதறலின்
உள்ளாந்த உந்துதலை
உசுப்பி விட்டுள்ளேன்

உனது உரிமைகளை
துகிலுரிப்பதற்காக
நீ பங்கரம்
நான் அமைதி
நான் அகிம்சை
நீ போர்

உனது வேகம்
எனது விவேகம்
உனது ஆளுமை
எனது ஆற்றல்
எது வெல்லும்
அது தர்மம்

**ஹர்ஜகன்**
10T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனைகளை மறந்து சாதனையில் கலை விழா

கலை விழா
காணும் நாளில்
மகிழ்வோடு வாழ்துரைக்க
வருக வென்றார்.
அகில் மணமும் சந்தனமும்
அள்ளி வீசி
குதித்துள்ளம் மகிழ்ந்தாட
வாழ்த்துகின்றேன்.

ஆண்டு பலவாக
கலைவிழா செய்த சாதனையை
ஈண்டு நினைத்திங்கு
இறும்பூது எய்துகின்றேன்
வேண்டும் துணையின்றி
வியந்திடும் சாதனையை
தூண்டும் மகிழ்ச்சியினால்
துதித்திங்கு வாழ்த்துகின்றேன்

சோதனைகள் வந்து
சோதித்த போதும்
சாதனைகள் படைத்து
சாதித்து நின்றதுடன்
வேதனைகள் மறந்து
விருந்தளிக்கும் கலைவிழாவின்
சாதனையை எண்ணி
சாற்றினேன் வாழ்த்துகள்

மலையில் வாழ் மக்களவர்
மனப்பாரம் நீங்கிடவும்
நிலை குலையும் மக்களவர்
நெஞ்சத்தை நிமிர்த்திடவும்
அலைவாயில் அகப்பட்டு
அள்ளுண்டு போகாமல்
தலைநிமிர வைத்திட
கலைவிழாவை வாழ்த்துகின்றேன்.

மாணவரின் நலத்திற்காய்
மற்றோரின் உயர்விற்காய்
மாண்புடனே நீண்டநாள்
மகிழ்ந்தளித்த சேவையினை
வானோரும் வாழ்த்திடுவார்
மற்றோரும் போற்றிடுவார்
நானிங்கு நன்மலர்கள்
மணம்கொண்டு வாழ்த்துகின்றேன்

**டி.கிரிஷான்**
10T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்புமை

அப்பா பேனாக்காரர்
எனக்கு அவர் உயிர்
அவருக்கு பேனா

அவர் எழுத்து
அமைதியானது
ஆர்ப்பாட்டம் அறியாதது

அமைதியாய் அலையடித்தார்
அரசியலின் களை எடுக்கப்போனார்
அந்த சாக்கடையை அலச அலச
மை தீர்ந்தது
பலமுறை கூர் உடைந்தது
சில சமயம் பேனா தொலையவும் பார்த்தது

அப்போது ஒதுங்கசொன்னோம்
கேட்க மறுத்தார்
கிளர்ச்சி மனம் புரட்சி செய்தது

நடுநிசியிலும் எழுத்தோடுதான் வாழ்ந்தார்
கடிகாரத்தின் அதிக ஓட்டங்களை
எழுத்துக்கே செலவு செய்தார்

ஒரு நாள் சென்ற
வேகத்திலே மீண்டும் வந்திருந்தார்
என்றும் இல்லாதபடி அவர் நெஞ்சின்
நிறம் மாறி இருந்தது மை சிதறின

"அப்பா பாருங்கள் உன் பிள்ளை" என்றேன்
அம்மா சிலையாகி போனாள்.

இப்படி ஒரு வாரம் சென்றது
மறுநாள் பத்திரிகை பார்த்தேன்
இன்னொரு பேனாவும்
சிதறியிருந்தது................

**ஜசால் அஹ்மத்**
11T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்ணிலா

வானப்பரப்பினிலே ஒரு
வட்டத்தோசை போலவே
எட்டி நானும் பார்த்திட
எழுந்து எழுந்து வருகிறாய்

பாட்டுப்போன்ற வானிலே
பால்நிறமாய் தெரிகிறாய்
எட்டித் தொட்டுப் பார்த்திட
எந்தன் உள்ளம் துடிக்குது.

இரவில் மட்டும் தெரிகிறாய்
பகலில் எங்கே செல்கிறாய்?
தேய் பிறையாய்த் தேய்கிறாய்
வளர்ப் பிறையாய் வளர்கிறாய்

மாதம் ஒரு நாளிலே
மகிழ்ந்து நானும் பார்த்திட
முழு நிலவாய் தெரிகிறாய்.
முந்தி முந்திச் செல்கிறாய்

ஏனொ தேய்ந்துச் செல்கிறாய்?
எழுந்து வளர்ந்து வருகிறாய்
அமாவாசை அன்று நீ
மாயமாக மறைகிறாய்

உன்னைக்காண என்றுமே
உள்ளம் மகிழ் நிற்கிறேன்.
என்றும் முழு நிலவாக
எங்கும் வர மாட்டாயா?

**கே.ஜே.எம். ஆஷிக்**
11T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதித்துக் கல்

## மகிமைகள் வரும்

கனிவு மிகுங் கருத்தோடு கற்பதனால்
கனிகளிலுங் மிக வினிக்கும் நிலைமை வரும்
கலைகளிலே யினிமை தரும் நற் கல்வியினால்
கனியு மனம் கடலைப் போல் விரிவு மிகும்

பணிவு மிகும் பக்குவமாய்ப் படிப்பதனால்
பரிவு மிகும் பலபலவாய் அறிவு வரும்
படிப்பதனை பிடிப்போடு படிப்பதுவே பயனுந்தரும்
படிப்படியாய்ப் பல தகைமை படித்தாலே மிகுந்து வரும்

மட்டற்ற மகிமை தருமார்க்கம் யாதிருக்கும்
மதிப்பு யரும் மறைக் கல்வியே மிகவிருக்கும்
மங்காத மகத்துவத்தாய் வாழிடமும் வாழ்வுஞ் சிறக்கும்.
மதிப்போம்டா! ஆசிரியக் குல மதித்தாலே மதி சிறக்கும்.

**எம். ஜே.எம். ஷஸ்லி**

14T2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி - எவ்வழி?

மனித மேம்பாட்டுக்கு கல்வியே சிறந்த வழி சிறுவயது முதலே எமது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் அனைவரும் கல்வியே மற்ற எல்லா செல்வங்களிலும் மிகச் சிறந்தது என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

''கல்வி இல்லாதவன் கண் இல்லாதவன்''

என்று கூறுவொர், இதனையே ஔவையார் ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.'' என்றார்.

கல்வி நமக்கு தேவைதான். இப் பிரபஞ்சத்தின் அம்சங்களை தெரிந்து கொள்ள, புதிய புதிய இயந்திரங்கள் புதிய ஆய்வுகள் செய்ய என்று எல்லா துறைகளிலும் மனித குலத்திற்கு கல்வி தேவைதான். கல்வி என்றால் என்ன? நாம் நமது அறிவை கூட்டிக் கொள்வதே கல்வி. நம்மை சிந்திக்க வைப்பதும் கல்விதான் ஆனால் ஏட்டில் படித்து பரீட்சைகள் எழுதி பட்டங்கள் வாங்குவது தான் கல்வி என்ற மனப்பான்மை தான் நம்மிடமுள்ளது. இது ஒரு தவறான சிந்தனை.

உண்மையான கல்வியில் பல்வேறு அம்சங்கள் நிறைந்திருக்கின்றது. முதலாவது கல்வி நம்மை தர்க்கரீதியாக (Logically) சிந்திக்கும் திறமையை ஏற்படுத்தவேண்டும். கிளிப்பிள்ளை போல் புத்தகங்களை மனப்பாடம் செய்து பரீட்சைகள் எழுதுவதல்ல உண்மையான கல்வி. நாம் கற்று சிந்தித்தோமானால் நமது மூதாதையர்களான கற்கால மனிதனின் சிந்திக்கும் தன்மை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. ஆதி காலத்தில் வனவிலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் தமது மேம்பாட்டுக்கு வனவிலங்குகளை விட மேன்மையாக வாழ்வதற்கு வழி என்ன என்று சிந்திக்க ஆரம்பித்த போதே மனித இனத்தின் கல்வி பயணம் ஆரம்பித்துவிட்டது. மிக எளிய முறையில் நெருப்பை உண்டாக்கினான்.தனக்கு தேவையான ஆயுதங்களை கற்களினால் செய்து கொண்டான்.

இயற்கையின் சீற்றங்களில் இருந்து காப்பாற்றிக் கொள்ள கற்குகைகளில் வாழ்ந்தான். இவை எல்லாம் மனிதன் தர்க்க ரீதியாக தனது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள கண்ட முறைகள். அன்று ஆரம்பித்த மனிதனின் அறிவுத்தான் இன்று மனிதனை சந்திரனுக்கு கொண்டு செல்லும் அளவுக்கு வளர்ந்து விட்டது. இந்த சாதனைக்கு அறிவு வளர்ச்சியே காரணம். அறிவு கல்வி மூலமே வந்தது.நாம் கல்வி என்னும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகப்படிப்பு என்று தான் எண்ணுகின்றோம். நமக்கு ஒரு அறிவை, ஒரு திறமையை நம்மை சிந்திக்க வைக்கும் எந்த செயலுமே ஒரு உண்மையான கல்விதான். உதாரணமாக ஒருவன் தச்சுவேலை கற்றுக்கொண்டால் அதுவும் ஒரு கல்விதான்.

ஒரு மனிதன் நிறைய படித்திருப்பதால் மட்டும் ஒரு பூரண மனிதனாக முடியாது. ஏட்டு கல்விக்கு அப்பாட்பட்ட கல்வியும் உண்டு ஒரு மனிதன் சமுதாயத்தில் ஒரு சிறப்பான அங்கத்துவனாக வாழ சில அடிப்படை குணங்கள் அவனுக்கு தேவை.
அன்பு, சத்தியம், நேர்மை, சகோதரத்துவம், மனிதநேயம், பொறுமை போன்ற குணங்கள் நம்மில் இருக்க வேண்டும். இவை புத்தகக் கல்வியில் மட்டும் வந்துவிடாது.

ஏட்டுக் கல்வியுடன் ஆன்மிக கல்வியும் அவசியம் என்பதை உணர வேண்டும். உலகில் தோன்றிய எல்லா மதங்களும் சில அடிப்படை உண்மைகளையே கூறுகின்றன. எனவே நாம் எத்தனை தான் கல்வி கற்றாலும் மனிதநேயத்தின் அடிப்படை குணங்களை மறந்துவிடாமல் முன் கொண்டு செல்ல வேண்டும்.

**ஏ.கே.கௌரிஷங்கர்**
14E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றல்

ஐம்புலன்களில் இருந்து வரும் உணர்வுகள் மூளையை அடைகின்றன. மூளை அவற்றை வகைப்படுத்தி உணர்ந்து கொள்கிறது. இந்த உணர்வுகள் மூளையிலேயே தங்கி இருந்தால் அவை நினைவுகளாக மாறிவிடுகின்றன. தேவை ஏற்படும்போது இந்த நினைவுகளை மீட்டெடுக்கமுடியும்.

நினைவாற்றலை குறுகிய கால நினைவாற்றல், நீண்டகால நினைவாற்றல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். நமது மூளை அன்றாடம் ஆயிரக்கணக்கான தகவல்களைப் பெறுகிறது. அத்தனை தகவல்களையும் மூளையிலேயே சேமித்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அவசியமான காலத்திற்கு மட்டுமே அந்த தகவல்கள் மூளையில் சேமித்துவைக்கப்படுகின்றன. இதுவெ குறகியகால நினைவாற்றல் என்று வகைப்படுத்தப்படுகின்றது.

நாம் செய்யும் தொழிலுக்குத் தேவையானவை, நம்முடைய மனதை மிகவும் கவர்ந்தவை அல்லது பாதித்தவை, மீண்டும் மீண்டும் சொல்லிப்பார்த்தவை ஆகிய தகவல்கள் நம்முடைய மூளையில் நீண்டகால நினைவுகளாக தங்கிவிடுகின்றன. நீண்டகால நினைவுகளில் இருந்து தகவல்களை மீட்டெடுப்பதற்கு மூளை சில நேரங்களில் சிரமப்படுவதை நாம் உணரமுடியும்.

மூளை பலசெய்திகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட தகவல்களுடன், புதிய தகவல்களையும் சேர்த்து பாதுகாக்கிறது. பலவருடங்கள் அந்த தகவல்களை வெளிக்கொணராமல் போனால் கோடிக்கணக்கான தகவல்களுக்கிடையில் அவை புதைந்து போகின்றன. இதனால்தான் நாம் சந்திக்கும் சிறுவயதுத் தோழரிடம், " உங்களுடைய பெயர் நாக்கில் இருக்கிறது: வரமாட்டேன் என்கிறது" என்று சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

குழந்தை பிறந்து மூன்று வயது வரையில் தான் பார்ப்பது, கேட்பது அனைத்தையும் புகைப்படங்களாக தனித்தனியே மூளையில் பதிவு செய்துகொள்கிறது. அவற்றின் முழுப்பொருளும் குழந்தைகளுக்குப் புரிவதில்லை. மூன்று வயதிற்கு மேல்தான் நீண்டகால நினைவுகள் படிப்படியாக உருவாகின்றன.

**வீ. பிரசன்னா**
14T2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஆசிரியர் கற்பிக்க வேண்டியவை: மாணவர் கற்றுக் கடைப்பிடிக்க வேண்டியவை....

(ஜனாதிபதி ஆபிரகாமிலிங்கன் தனது மகனுக்காக வெள்ளைமாளிகையில் இருந்து பாடசாலை அதிபருக்கு எழுதிய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கடிதத்தின் உள்ளடக்கம். )

எல்லா மனிதர்களும் தார்மீகமானவர்களல்லர். அதேபோல் எல்லா மனிதர்களும் நேர்மையானவர்களும் அல்லார் என்பவை நான் அறிவேன். இதனை எனது மகன் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் ஒவ்வொரு கயவனுக்கு பதிலாக ஒரு வீரன் இருக்கின்றான் என்றும் ஒவ்வொரு சுயநல அரசியல்வாதிக்குப் பதிலாக ஓர் அர்பப்ணிப்புள்ள தலைவன் இருக்கிறான் என்றும் அவனுக்குப் போதியுங்கள். ஒவ்வொரு எதிரிக்கு பதிலாக ஒரு நண்பன் இருக்கின்றான் என்பதை அவனுக்கு கற்றுக்கொடுங்கள் இதற்கு காலம் எடுக்கும் என நானறிவேன்.

உங்களால் முடிந்தால் ஒரு டொலர் சம்பாதிப்பது ஐந்து டொலர்களை கண்டெடுப்பதைவிட மிகவும் பெறுமதியானது என்றும் அவனுக்கு கற்றுக்கொடுங்கள். தோல்வியை ஏற்றுக் கொள்ளவும் அதேபோல் வெற்றியை நிதானமாக அனுபவிக்கவும் அவனுக்குக் கற்றக்கொடுங்கள் பொறாமையிலிருந்து விலக்கி அவனை வழிநடத்துங்கள். முடிந்தால் அமைதியான சிரிப்பின் இரகசியத்தை அவனுக்கு கற்றுக்கொடுங்கள். சண்டித்தனம் பண்ணுபவர்கள் இலகுவில் பயங்கொள்வார்கள் என்பதையும் அவன் இளம் வயதிலேயே கற்றுக்கொள்வார்கள் என்பதையும் அவன் இளம் வயதிலேயே கற்றுக்கொள்ளட்டும். உங்களால் முடிந்தால் நூல்களின் அதிசயங்களை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். ஆனாலும் ஆகாயத்து பறவைகள் பகல் நேரத்துத் தேனீக்கள், பச்சை மலைச்சாரல் பூக்கள் போன்ற சர்வகால மர்மங்களை அழகாகச் சிந்திக்கத் தேவையான நேரத்தையும் அவனுக்குக் கொடுங்கள்.

பாடசாலைகளில் தோல்வியைத் தழுவுவது ஏமாற்றத்தை விடவும் மிகவும் மேன்மையானது என்று அவனுக்கு போதியுங்கள் மற்றவர்கள் அது தவறு என்று சொன்னாலும் கூட அவனது சொந்தக் கருத்துக்களில் நம்பிக்கை வைக்க கற்றுக்கொடுங்கள்.

சாந்தமான மக்களுடன் சாந்தமாகவும், கடும்போக்குள்ளவர்களிடம் கடுமையாகவும் நடந்துகொள்ளக் கற்பியுங்கள்.

எல்லோரும் தாளம் போடுகிறவர்கள் என்பதற்காக அவர்களின் வழியில் தானம் இணைந்து கொள்ளாமல் இருக்கக் கூடிய பலத்தை முடிந்தளவு என் மகனுக்குக் கற்றுக்கொடுங்கள். எல்லோருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருததுக்களையும் செவிமடுக்க அவனக்குக் கற்றுக்கொடுங்கள். ஆயினும் அவை எல்லாவற்றையும் உண்மை என்ற திரையில் காட்டி அதிலிருந்து வரும் நல்லவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்.

உங்களால் முடிந்தால் அவன் சோகத்திலிருக்கும்போது எப்படி சிரிப்பது என்பதைக் கற்றுக்கொடுங்கள். கண்ணீரில் வெட்கமில்லை என்பதைக் கற்றுக்கொடுங்கள். எப்போதும் குற்றம் குறை கூறுபவர்களை அலட்சியம் செய்யவும். இனிக்க பேசுபவர்களிடம் அவதானமாக இருக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அவனுடைய உடல் வலிமையையும், அறிவையும் கூடிய விலை கோருபவர்களிடம் விற்கவும், அதே வேளை இதயத்திற்கும் ஆன்மாவிற்கும் ஒருபோதும் விலைப்பட்டியல் போடவேண்டாம் எனவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கூச்சலிடும் காடையர்களுக்கு தன் செவிகளை மூடிக்கொள்ளவும் அவன் தான் சரியென நினைக்கும் காரியங்களில் உறுதியாக நிற்கவும், அதற்காக போராடவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனை கனிவாக நடத்தவும். ஆனால் அவனை தழுவிக்கொஞ்சவேண்டாம். ஏனெனில் நெருப்பின் சோதனைதான் இரும்பை தரமாக்குகின்றது. பொறுமையாக இருப்பதில் துணிவு பெற அவனை அனுமதியுங்கள். தைரியமுள்ளவனாக மாற விடாமுயற்சி செய்ய அனுமதியுங்கள். தன்மீது உன்னதமான நம்பிக்கை வைக்க அவனக்குக் கற்றுக்கொடுங்கள். அப்பொழுதுதான் மனித இனத்தின்மீது அவன் எப்போம் உண்மையான நம்பிக்கை கொண்டிருப்பான். "This is a big Order but see what you can do he is such a fine little fellow my son" அது பெரிய கட்டளை ஆனால் உங்களால் என்ன செய்ய முடியும் என்று பாருங்கள். என் மகன் நல்லதொரு குட்டிப்பையன்

ஆபிரகாமிலிங்கன்.

**தொகுப்பு –**
**எம்.எம்.அஹ்மத் முஸ்தாக்**
14T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றலை அதிகரிக்க மாத்திரைகள் அவசியமா?

இது தேர்வுக் காலம். மாணவர்களும் பெற்றோர்களும் ஒரு சேர 'மதிப்பெண்கள்' என்ற இலக்கில் பயணிக்கிறார்கள். நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் ஞாபக சக்திக்கான மாத்திரை விளம்பரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. நமது குழந்தைகளுக்கு இன்னும் ஞாபக சக்தி கூடினால் 100 மதிப்பெண் உறுதி என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். வாங்கித் தருகிறார்கள். இந்த மாத்திரைகளால் ஞாபகசக்தி கூடுமா? எவ்வளவு காலம் பயன்படுத்தினால் ஞாபகசக்தி கூடும்? நீண்ட காலம் பயன்படுத்தினால் ஓரளவு பயன் கிடைக்கலாம்.

நினைவாற்றல் மூளையின் முக்கியச் செயற்பாடு ஞாபகசக்தி மனித குலம் முழுமைக்கும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் தேவையான ஆற்றல் ஆகும்! வயது ஆக ஆக ஞாபகச்சக்தி குறைகிறது. வயதானவர்கள் பழங்கால நிகழ்ச்சிகளைச் சொன்னால் 'அபார ஞாபகசக்தி' என்கிறோம். நமக்கு நினைவில் நிற்காத ஒன்றை அடுத்தவர் எடுத்துச் சொன்னால், அவரின் நினைவாற்றலுக்காக புகழ்கிறோம்.


நினைவாற்றல் பயிற்சியால் வளப்படுத்தக்கூடிய ஆற்றல். நினைவு என்பது தேவையைப் பொறுத்தது. மூளை எவ்வளவு தகவல்களை வேண்டுமானாலும் நிரப்பிக் கொள்ளும். ஆனால் அடிக்கடி பயன்படும் தகவல்கள் நினைவில் மேல் அடுக்கில் இருக்கும். பயன்படுத்தாத தகவல்கள் புதைந்து கிடக்கும். தேவைப்படும்போது வெளிவராமல் போகும். இதை ஞாபக மறதி என்கிறோம்.

ஞாபக மறதி ஏற்பட பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது காலம். அண்மை நாள் நிகழ்ச்சிகள் ஞாபகம் இருக்கும். பழங்கால நிகழ்வுகள் ஞாபகம் இருக்காது. இது இயற்கை. அடுத்தது விருப்பமான தகவல்கள் ஞாபகத்தில் நிற்கும். கவனகப் பயிற்சியில் நினைவாற்றலை கூர்மைப்படுத்தி நினைவேந்தல்களாக பலர் இருந்துள்ளனர். பயிற்சிக்கும் ஞாபக சக்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இப்போது யோசிப்போம். மாத்திரையால் ஞாபக சக்தியை அதிகரிக்க முடியுமா என்று. பயிற்சிக்குப் பதில் மாத்திரை போதுமா?

மாத்திரை நினைவாற்றலை மேம்படுத்தாது. மரபார்ந்த சித்த மருத்துவத்தில் ஞாபக சக்திக்காக மருந்துகள் இருக்கின்றன. வல்லாரை, பிராமி கொண்டு இம்மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. நோய்க்காக தரப்படும் மருந்து அனைவருக்கும் ஒன்றே போல் பயன் தரலாம். ஆனால், நினைவாற்றல் குறைவு நோயல்ல! எனவே ஞாபக சக்திக்கான மாத்திரைகள் ஒரே விளைவை எல்லோருக்கும் ஏற்படுத்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மகத்துவம்

'கண்ணுடையார் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்'

கற்றவருக்கோ முகத்தில் இரு கண்களுண்டு. மற்றவருக்கொ முகத்தில் இரு புண்களே உண்டு என கல்வியின் மகத்துவத்தினை தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுகின்றார். இவ்வையகத்திலுள்ள செல்வங்களுள் கல்விச் செல்வமே சிறந்தது. கல்வி பேதையை ஞானியாக்கும் முடவனை முதல்வனாக்கும், கோழையை கொலுவிலேற்றும் ஏழையை இயல்வோனாக்கும் வறியவனை வாழ வைக்கும் அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும்.

'' செல்வ மொழிந்திடும் தேக மழிந்திடும்
தேவ போகங்களுக்கு சேதம் விளைந்திடும் ''

என்கிறார் கோபாலகிருஷ்ண பாரதி

அதாவது செல்வமானது அழிந்தொழிந்து விடும். உடலும் அழிந்து விடும். உயர்ந்த இன்பங்களும் அழிந்து விடும். ஆனால் கல்விச் செல்வமானது ஒரு போதும் எதனாலும் அழியாது. மற்றைய செல்வங்களோ நிலையில்லாதவை. ஆனால் கல்விச் செல்வமானது என்றும் நிலையானது.

ஒரு மாணவனின் எதிர்காலம் அவன் கற்கும் கல்வியின் மூலமே நிர்ணயிக்கப்படுகிறது. கல்வியின் மகத்துவத்தினை அறியாமல் விவேகத்திறனை வளர்த்துக்கொள்ளாத மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது.

'வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவின்றி குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ
மிக எளிய கல்வியென்றும்
உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப்
பொருள் தேடியுழலகின்றாரே'

என தனித்தமிழ் தந்தை மறைமலை அடிகளார் கல்வியின் மகத்துவத்தினை கூறுகின்றார். ஓடம் நதி வற்றிப்போனாலும் பெய்யும் மழை நின்றாலும் என்றுமே ஓயாதது கல்வி! கூடு கலைந்தாலும் பூமி பிரிந்தாலும் என்றுமே அழியாததுகல்வி!

'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்’

ஒரு தாய் தன்மகனைப் பெற்ற பொழுதிலும் அடைந்த மகிழ்ச்சியை விட அவன் கல்விமான்களில் சிறந்தவனாக விளங்கிடும் போது பன்மடங்கு மகிழ்ச்சியடைகின்றாள். இத்தகைய பெருமையினை தேடி தருவது எது? அது தான் கல்வி.

மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறமையை வெளிப்படுத்துவது கல்வியே. கல்வியின் மகத்துவத்தினை அறிந்து இன்று உலகம் போற்றும் ஆசான்களாக திகழும் தோமஸ் அல்வா எடிசன், அப்துல்கலாம், ரைட் சகோதரர்கள் மார்க்கோகணி போன்ற பெரியோர்களை நினைவுக்கூறலாம்.

எமது கருமையான கண்களுக்கு ஒளி கொடுக்கும் அபூர்வ சக்தியைக் கொண்டது கல்வி. மாணவர்களாகிய நாம் இன்று தலை குனிந்து படிப்பதெல்லாம் எதிர்கால சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே. எனவே இவ்வாறான அறிவை பெற்று கல்வியின் மகத்துவத்தினை அறிந்துக்கொள்வதற்கு நம் நாட்டில் இலவசக் கல்வித்திட்டம் உள்ளது. எனவே நாமதைப் பயன்படுத்தி ‘‘கசடறக் கற்று” நாடு போற்றும் நன்மணிகளாகத் திகழ்வோமாக.

வளர்க கல்வி! வாழ்க கல்வியின் மகத்துவம்!

நன்றி
வணக்கம்

**ஆர். மதுரஷன்**
14T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழியின் விளக்கம்

இயற்கைக் கவிஞர்களாகிய பாமர மக்கள் தங்கள் அனுபவத்தைக் கற்பனை களஞ்சியமாகக் கொண்டு பாடப்படுபவை நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். இன்பத்தைப் பாட்டால் பகிர்ந்து கொள்ளவும் சோர்வை போக்கிக் கொள்ளவும் வாய்மொழியாகத் தாலாட்டு, ஒப்பாரி, விடுகதை, விளையாட்டு பிசி, பழமொழி ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். மக்கள் தங்கள் வாழ்வில் பிசி, பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். பழமொழி என்பது மக்களின் பண்பாட்டினை ஒட்டிய வாழ்வியல் முறைகளில் தொன்மையான வாக்கிய முதிர்வு பெற்ற சொற்களைப் பழமொழி என்பர். பழமொழியை மலையாளத்தில் ''பழஞ்சொல்'' என்றும் தெலுங்கில் ''நாதுடி'' என்றும் கன்னடத்தில் ''நாண்ணுடி'' என்றும் ஆங்கிலத்தில் Proverb என்றும் வழங்கப்படுகின்றது. பழமொழிகள் மூலம் மக்கள் வாழ்க்கை முறையினை அறிந்து கொள்ள முடிகின்றது. சாலை இளந்திரையன் பழமொழிகளைப் பற்றி ''பழமொழிகளும் ஏனைய பாமரர் இலக்கியங்களும் அவைகளைப் படைத்து வழங்கி வந்த மக்களின் கருத்தோட்டத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன. எனவே மக்களின் சமுதாய இயல், அரசு இயல், நீதி இயல் மற்றும் மத இயல், கோட்பாடுகளைப் பற்றிய ஆய்வுக்கு இவைகளை விடச் சிறந்த சாதனங்கள் வேறு இல்லை. எனவே மக்களின் சமூகம், நீதி, அரசு, மதம் சார்ந்த வரலாற்றை அறிந்து கொள்ள பழமொழிகள் உறுதுணை புரிகின்றன என்பதை அறிய முடிகின்றது.

**பழமொழியின் தோற்றம்**

மனிதன் என்று சிந்தித்துப் பேசத் தொடங்கினானோ அன்றே பழமொழிகள் தோன்றி இருக்க வேண்டும். ஏனெனில் மக்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்து ஒன்றி இணைந்து இருப்பதால் இவை யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறுதியிட இயலாததாக இருக்கின்றது.

தமிழ் இலக்கியங்களின் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் பழமொழிகளைக் குறித்த செய்திகள் வருகின்றன. அவற்றைக் குறிக்க பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. என்பதால் அதற்கு முன்பே பழமொழிகள் சிறப்புப்பெற்று இருந்திருக்க வேண்டும். நீதி நூல்களில் ''பழமொழி நானூறு'' என்ற நூலும் வெண்பாவால் இயற்றப்பட்டிருப்பது பழமொழிகளுக்குச் சிறப்பு சேர்ப்பதாக இருக்கின்றது. பின்னாளில் எழுந்த, தண்டலையார் சதகம், கோவிந்த சதகம், பழமொழி போதனை, பழமொழி போதம், பழமொழித் தாலாட்டு என்ற இலக்கியங்கள் எல்லாம் பழமொழியைப் பயன்படுத்தியும் பழமொழியின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமொழிகளின் தோற்றத்தைப் பற்றி அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். ச. சிவகாமி பழமொழிகள் பழங்காலத்தில் இருந்தே மக்களிடையே வழங்கி வருகின்றன. காலந்தோறும் அவற்றிற்கிடையே மாற்றங்கள் சூழல்களுக்கேற்ப ஏற்படுவதுடன் புதியனவும் தோன்றுகின்றன. வாழ்க்கை ஒழுங்கிற்கு எழுதாச் சட்டங்களாக நின்று வழங்கி வந்த பழமொழிகள் இலக்கிய உருவாக்கக் காலத்திற்கு முன்பே தோன்றின. என்று உரைக்கின்றார். அதனால் பழமொழிகள் ஒவ்வொரு காலத்திலும் தோற்றம் பெற்று மக்களின் வாழ்க்கையோடு இயைந்தும் சிறந்தது நிலைத்தும் அல்லாதது மறைந்தும் போய் விடுகின்றன எனலாம். மனித வாழ்வின் ஒட்டு மொத்த பயன்பாட்டில் நல்லவற்றையும் தீயவற்றையும் சுட்ட வருவன பழமொழிகள். இவை அறிவின் அடியாக நிகழும் நிகழ்ச்சிகளையும் பண்பின் அடியாக நிகழும் நிகழ்ச்சிகளையும் தொழிலின் அடியாக நிகழும் நிகழ்ச்சிகளையும் வாழ்வியல் முறைகளின் அடியாக நிகழும் நிகழ்ச்சிகளையும் கொண்டே அந்தந்த நிகழ்ச்சிகளில் வல்லார்.

அந்தந்த நிகழ்ச்சிகளைச் செய்ய வேண்டிச் சிலபல பழமொழிகளை தோற்றுவித்தனர். அவையே பழமொழிகளாயின என்று செந்துறை முத்து குறிப்பிடுகின்றார்.

பழமொழியின் தன்மை

வாழ்க்கை அனுபவமே பழமொழிகள். அவை என்றும் பொய்ப்பதில்லை, பழமொழியின் பொதுத்தன்மைகள் குறித்து அறிஞர்கள்,

1. ஆயிரம் நூற்களைக் கற்பதைவிட அறிஞர்கள் கூறும் பழமொழிகளே அதிக அறிவைத் தரும். - லாவேட்டர்
2. பழமொழிகள் இருட்டில் வழிகாட்டும் தீவர்த்தி - பாஸ்ளியல் பழமொழி
3. சிறந்த பொருளை சுருங்கிய முறையில் உள்ளத்தில் பதியும் வண்ணம் கூறுவதே பழமொழியின் தன்மை - தாமஸ்கார் லைன் பழமொழி
4. வானம் இடிந்து விழுவதில்லை பழமொழி பொய்யவாதில்லை
5. பழமொழிக்கு உமியில்லை - இந்தியா
6. பால் புளிக்குமா? பழமொழி பொய்க்குமா? - அமேரிக்கா

**எல்.ஏ. மோகன்**
14E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமனித விழுமியம் எனும் மேம்பாட்டில் தமிழ் கல்வியின் முக்கியத்துவம்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கும், அவனது வாழ்வு மேம்பாடானதாக இருப்பதற்கும் உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே தனிமனித விழுமியங்கள் எனப்படும். தனிமனித விழுமியங்கள் எனும் போது அன்பு, உளத்தூய்மை, சமாதானம், அமைதி, உதவி செய்தல், சகிப்புத்தன்மை, உண்மை பேசுதல், தலைமைத்துவம், பெரியோரை மதித்தல், பஞ்சமா பாவங்களை தவிர்த்தல் என்பவை ஆகும்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.''

என தமிழின் சிறப்பை வியந்து பாடுகிறான் பாரதி. ஆம் உலகில் உயர்ந்த தனிச் செம்மொழிகளின் தமிழ்மொழியும் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. பழைமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் இருவழக்கும் பெற்று, இலக்கிய வளமும் கொண்டு காலத்தால் அழியாதது எமது கன்னித்தமிழ் மொழியாகும்.

இவ்வாறான தமிழ் மொழி தனிமனித விழுமியத்தின் மேம்பாட்டிற்கு எவ்வாறான பங்கை வகுத்துள்ளது? ஆம் தனிமனித விழுமியத்தின் முதன்மையானது 'அன்பு' எனும் உலக மகாசக்தி ஆகும். அன்பு என்பதை தமிழ் மொழியின் தந்தை எனக்கூறும் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார்.

'' அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''

அதாவது அன்பு இல்லாதவர் எல்லா பொருளையும் தமக்கே உரிமையாக்கி வாழும் தன்னலக்காரராய் இருப்பவர். அன்புடையோர் தம் உடலையும் பிறர் நலத்துக்காக ஈந்து மகிழ்பவர் என்பதாகும்.

''பொறுத்தார் பூமியாழ்வார்
பொங்கினார் காடாள்வார்''

என்பது முதமொழி. சகிப்புத்தன்மை இழந்தவன் வாழ்வில் அமைதி இழந்தவனாகின்றான். மனித உள்ளத்தினை புனிதப்படுத்தும் மாண்புமிக்க எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியில் போல் உலகில் வேறு எந்த மொழியும் இல்லை என்றே கூற வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக திருவள்ளுவர் எழுதிய திருக்குறளை எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் தற்போதைக்கு திருக்குறளை கிரேக்கம், இலத்தீன், மலாய், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது''
விபுலானந்தர் கூற்று தூய்மையான இடத்திலும் உள்ளத்திலும் இறைவன் இருப்பார் அகத்தூய்மை தமிழ் இலக்கியத்தின் பங்களிப்பைப் பற்றி மேல்நாட்டு அறிஞர்களாகிய பெசுகி, போம் முதலியோர் கூட கூறுவதை நாம் மறக்க முடியாது.

குழந்தை வயதிலேயே ஒற்றுமை, உண்மை பேசுதல் புறம் பேசாது இருத்தல் என்பன வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பதை கவிஞர் பாரதி தன் பாடலிலே இவ்வாறு பாடுகிறார்.

கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
பொய் சொல்லக்கூடாது பாப்பா
புறஞ் சொல்லலாகாது பாப்பா என்கிறார்.

இவை மட்டுமா முல்லைக்கு தேர் தந்த பாரதி புறாவுக்கு தன்னைத் தந்த சிபி, மயிலுக்கு போர்வை தந்த பேகன் என இவ்வரசர்களின் ஆட்சிறப்பு, கொடைச்சிறப்பு, வீரம், காதல் என ஆயிரமாயிரம் சிந்தனைகளையும் தமிழ் காப்பியங்கள் மூலம் தனிமனித விழுமியத்திற்கு கொடுத்துள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்
நீதும் நன்றும் பிறர் தர வாரா'
என்று பாடினார் கனியன் பூங்குன்றனார். முழு உலகையும் ஊராகவும் முழு உலக சமூதாயத்தையும் உறவினராகவும், கண்டவன் தமிழனம் தமிழ் இலக்கியங்களும் ஆகும்.

இவ்வகையில் நோக்கும் போது ஆதி காலம் தொட்டு இன்று வரை, ஏன்? நாளையும் கூட தனி மனித விழுமியத்திற்கு தமிழ் மொழியின் பங்களிப்பும், தமிழ் இலக்கண, இலக்கியத்தின் பங்களிப்பும் பெரும் பங்காற்றியுள்ளதை நாம் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

நன்றி
வணக்கம்

N.P.De Cruze
14E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியக் குடும்பம்

நாம் இருக்கும் அண்டவெளி மிகவும் பரந்தது. பால் வீதிகளும், விண்மீன்களும், கோள்களும், சூரியன்களும் கொண்ட இந்த அண்டவெளியின் அளவை நம்மால் கற்பனை செய்தே பார்க்க முடியாது. நாம் காணும் அண்டத்தின் ஒரு பகுதியே சுமார் 25,000 கோடி ஒளியாண்டுகள் தூரம் உடையது.

இந்த அண்டவெளி தோன்றிய விதத்தை பெல்ஜியம் நாட்டைச் சேர்த அபே லெமைட்ரோ என்பவர், தனது பெரு வெடிப்புக் கொள்கையால் விளக்கியிருக்கிறார்.(Big Bang Theory).பலகோடி ஆண்டுககுக்கு முன்பு அழுந்தி சுருங்கிய நிலையில் இருந்த இந்த அண்டம் வெடித்துச் சிதறியதால் விரிவடையத் தொடங்கியது என்பதுதான் இக்கொள்கை கூறும் கருத்து. 1500 கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் அப்படி நடந்தது.

சூரியக் குடும்பம்: இந்த அண்டவெளியில் நம் பூமிக்கு அருகில் இருக்கும் சூரியனையும் அதை சுற்றிவரும் கோள்களையும் சேர்த்து நாம் சூரியக் குடும்பம் என்கிறோம். இதில் 1500 வகையான சிறு கோள்களும் (Asteroids), எரிகற்களும், வால் விண்மீன்களும் கூட அடங்கும். இந்த சூரியக்குடும்பம் எப்படி தோன்றியது என்பதைப் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சூரியனை நோக்கி ஒரு விண்மீன் நெருங்கி வந்தது. இரண்டுக்கும் இடையில் ஏற்பட்ட ஈர்ப்பு விசையின் விளைவாக கதிர் அலைகள் எழுந்தன. பின்னர் சூரியனிலிருந்து பிரிந்த சில துண்டுகள் தனித்தனியே துகள்களாக, குளிர்ந்து, உருண்டு கோள்களாயின, துணைக் கோள்கள் தாம் பிரிந்த கோள்களையும், கோள்கள் சூரியனையும் சுற்றிவரத் தொடங்கின என்று ஒரு கருத்து இருக்கிறது.

ரஷ்ய அறிவியலாளர் ஆட்டோ ஷ்மிட், வேறு ஒரு கருத்தைச் சொன்னார். சூரிய மண்டலத்திலுள்ள திடப் பொருட்களும், தூசுகளும் திரண்டு கோள்கள் உருவாயின என்றார். இந்த கோள்கள் சூரியனை நடுநாயகமாகக் கொண்டு சுமார் எட்டு பில்லியன் மைல் அகலத்துக்கு பரந்து விரிந்து இருக்கின்றன. சில கோள்களுக்கு இடையிலே ஒரு பில்லியன் இடைவெளி கூட உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியக் குடும்பத்தில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரெனஸ், நெப்ட்யூன் ஆகிய எட்டு கோள்கள் உள்ளன. முன்னர் இந்த வரிசையில் புளுட்டோ என்ற ஒன்றும் ஒன்பதாவது கோளாக இருந்தது. அது ஒரு கோள் அல்ல என்று அண்மையில் அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்து நீக்கி விட்டனர். இந்தக் கோள்கள் எல்லாமே ஓர் ஒழுங்கான இடைவெளிகளில் தள்ளித் தள்ளி சூரியனைச் சுற்றி வருகின்றன. இக் கோள்களை சூரியனுக்கு அருகில் இருப்பவை, சூரியனுக்கு தொலைவில் இருப்பவை என்று இரு வகையாகப் பிரிக்கலாம். உள்கோள்கள், வெளிக்கோள்கள் என்றும் கூட சொல்லலாம்.

புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியவை உள்கோள்கள். இவற்றில் பூமிதான் பெரியது. இக்கோள்கள் அனைத்துமே அடர்த்தியானவை, பாறைகளால் ஆனவை. அதனால் இவைகளை புவிக் கோள்கள் என்றும் கூட அழைப்பதுண்டு.
வியாழன், சனி, யுரெனஸ், நெப்டியூன் ஆகியவை வெளிக் கோள்கள். இவை அனைத்தும் உருவத்தில் பெரியவையாகும். பல துணைக்கோள்களும் கூட இவைகளுக்கு உண்டு. இந்தக் கோள்களின் பெரும்பகுதி ஹைட்ரஜன் (நீர்வளி), ஹீலியம் ஆகிய வாயுக்களால் ஆனவை. இவைகளின் சுழற்சி வேகமும் மிக அதிகம்.

இந்த கோள்கள் அனைத்துமே ஒரே சீரான இடைவெளியில் சுழல்கின்றன. சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தொலைவை ஓர் அலகாக் கொண்டால் புதன் 1/3 தூரத்திலும், வெள்ளி 2/3 பங்கு தூரத்திலும், செவ்வாய் 1.5 மடங்கு தூரத்திலும், வியாழன் 5 மடங்கு தூரத்திலும், சனி 10 மடங்கு தூரத்திலும், யுரெனஸ் 20 மடங்கு தூரத்திலும், நெப்டியூன் 30 மடங்கு தூரத்திலும் உள்ளன. இந்தக் கோள்கள் அனைத்தும் சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன.

**தொகுப்பு**
**எஸ். சுதர்ஷன்**
14T1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை தரும் யோகாசனங்கள்!

பவன முக்தாசனம்:

அடிவயிற்றில் சேரும் வாயுக்களை வெளியேற்றி உடலுக்கு விடுதலை அளிப்பதால் அந்த பெயர்.

பலன்கள்: வயிற்றில் சுரக்கும் அதிக அமில சுரப்பைக் கட்டுப்படுத்துகிறது. அதனால் அல்சர், வயிற்று புற்று நோய் ஆகியவை வராமல் தடுக்கும். வாயு கோளாறுகளை போக்குவதால் புத்துணர்ச்சியை நாள் முழுவதும் அளிக்கிறது. மலச்சிக்கல் செரியாமை, வயிற்றுக் கோளாறுகளை போக்குகின்றது. உடல், எடை, அதிக வயிற்று தசை ஆகியவற்றை குறைக்கிறது. மாரடைப்பு நோய், இருதய நோய்கள் வராமல் தடுக்கிறது.

நுரையீரலுக்கு வலிமையை ஊட்டி அதன் செயல்பாட்டினை அதிகரிக்கிறது. மூல வியாதி கோளாறுகள், இரத்தக் குடல் வால்வுக் கோளாறுகள், மூட்டுவலி, வயிற்றுவலி பெண்களுக்கு கருப்பை கோளாறுகள் ஆகிவற்றை போக்குகிறது. பிரசவித்த பெண்களின் அடிவயிற்று பெருக்கத்தை குறைப்பதற்கு அர்த்த ஹலாசனம் செய்தவுடன் இந்த ஆசனத்தை செய்து வந்தால் அதிக பலன் கிடைக்கும்.

செய்முறை: 1

1. இந்த ஆசனத்தை இரண்டு பகுதிகளாக பிரித்து செய்ய வேண்டும்.
2. சவாசனத்திலிருந்து கால்களை ஒன்று சேர்க்கவும். வலது காலை உயர்த்தி மடித்து கால் முட்டியை வயிற்றை நோக்கிக் கொண்டு வரவேண்டும்.
3. கை விரல்களை ஒன்று சேர்த்து முட்டியை பிடித்து வயிற்றை நோக்கி அழுத்த வேண்டும்.
4. இடது காலை மடிக்காமல் தலையை உயர்த்தி எழுந்து முகவாய் கட்டையை வலது கால் முட்டியை நோக்கி கொண்டு வந்து சேர்க்கவும்.
5. சாதாரண மூச்சில் 15 எண்ணிக்கை இருந்து விட்டு தலை, கால்களை பிரித்து விரிப்பின் மீது படுக்கவும்.
6. மாற்று ஆசனமாக இடது காலை மடித்து முன்பு போல் செய்யவும்.
7. வலது இடது என மாற்றி மாற்றி மூன்று முறை செய்துவிட்டு சவாசனத்திடல் ஓய்வு எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து உயர்த்தி மடித்து வயிற்றின் மீது கொண்டு வரவும்.
2. கைவிரல்களை ஒன்று சேர்த்து அல்லது தனித்தனியாக கால்முட்டிகளை பிடித்து வயிற்றில் அழுத்தம் கொடுத்து தலையை உயர்த்தி முகவாய் கட்டையை இரண்டு முட்டிகளுக்கு இடையில் கொண்டு வந்து வைக்க வேண்டும்.
3. சாதாரண மூச்சில் 15 எண்ணிக்கை இருந்துவிட்டு கால்களையும் தலையையும் பிரித்து மல்லாந்து படுத்து ஓய்வு எடுக்க வேண்டும்.
4. மூன்று முறை செய்துவிட்டு சவாசனத்திற்கு வரவேண்டும்

குறிப்புகள்:

1. சாதாரண மூச்சில் பழக வேண்டும். அப்படி முடியாதவர்கள் வயிற்றில் அழுத்தம் குறைவாக கொடுத்து செய்யவும்.
2. கழுத்துவலி உள்ளவர்கள் தலையை உயர்த் தாது தரையின் மீது வைத்து கால்களை மட்டும் மடித்து அழுத்தம் கொடுத்து செய்யவேண்டும்.

அப்படி செய்து வந்தால் நாற்பது வயதிற்கு மேல் வரும் 'லும்போ சேக்ரல்ஸ்பாண்டி லைடிஸ்' மற்றும் 'லும்போ எவர்டிலரே'' எனும் அடிமுதுகு வலி (இடுப்பும் முதுகுத்தண்டும் சேரும் இடம்) குணமாகும் (கடைசி ஐந்து முதுகுத்தண்டு வட எலும்புகளின் இறுதியில் சேக்ரம் என்ற பெரிய எலும்பு உள்ளது. அந்த சேக்ரத்தின் மேல் கடைசி எலும்பு அழுத்தி விட்டால் வலி மிகக் கொடுமையாக இருக்கும்)

**P.பிரவீன் பிரகாஷ்.**
14T1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மன்றாடல்!

இந்து சமுத்திரத்தின் முத்து அது
இலங்கை நாடெனும் சொத்து!
இயற்கை எழில் இங்கு ஏராளம்!
'இல்லை'க்கு இடமின்றி கவின் தாராளம்!

வரைகள், வயல்கள், கடற்கரைகள்,
காடுகள், 'கா' கள், கங்கை நதிகள்
நீளப்பரந்த பெருந்தோட்டங்கள்,
வெண்புனல் தெறிக்கும் நீர்வீழ்ச்சிகள்!

மஞ்சுகள் கொஞ்சித் தவழும் பசுங்குன்றுகள்!
அஞ்சுகம் கீச்சிட்டு மகிழும் வனப்பு பொழில்கள்!
நாவில் சுவையூற வைக்கும் நல் இன்கனிகள்!
நோய் தீர்த்திட வல்ல மூலிகை செல்வங்கள்!

இத்துணை சிறப்புறும் நம் அன்னைபூமியை
மெத்தென புகழ் பாடிடாது,
இருந்திடத்தான் இயலுமா என்ன?

குன்றுகள் சூழவுள்ள மையப்பகுதியில்,
மனங்கவர் செழிப்புடன் மாவலி சீதளத்தில்,
நிமிர் சிரசாய் பெருமிதமாய் நிற்கும் நம்
கண்டிமா நகரின் இதயமாய் இயங்கும்
கலைக்கூடம் எம் திரித்துவக் கல்லூரி!

வரலாற்று சிறப்பதனை தன்னகம் கொண்டு,
வாழையடி வாழையாக வாழும் நம் கல்லூரி,
கலைஞரை, கல்விமான்களை, கண்ணியம் மிகோரை,
வித்தகரை, வைத்தியரை, வல்லோரை,
ஆள்பவரை, ஆளுமையுள்ளோரை......... இஃதே
துறைசார் புலமை பொதிந்தோரை

வடித்த சிற்பமாய் உலகிற்கீத்த பெருமை
உண்டு இதற்கு!
மறுத்திதை எவரும் கூறிடார் பாரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறிவுச் சொத்தாம் அரிய செல்வமதை
அளித்தெம்மை வளர்த்தெடுத்த
அன்னை நம் திரித்துவக் கல்லூரி
அழியா புகழ் பரப்பி அவனிதனில்
ஆகாயம் எட்டும் பெயருடன்
ஆண்டாண்டு நிலைத்திட
அடியேன் யான் மன்றாடி,
ஆண்டவனை வேண்டுகிறேன்!........

இறைவா!
கல்லில் கால் தடம் பதித்திட
கால காலமாய் நிலைத்திட
கல்லூரி அன்னையை உயர்த்திட
கெஞ்சி யான் இறைஞ்சுகிறேன்!
கோடானு கோடியாயே!

L.A. மோகன்
13E1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் முரசு

திரித்துவோதயம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக்கலைஞன் நவாலியூரான் நா.செல்லத்துரை

## சில ~ குறிப்புகள்

இரா.சிவலிங்கம்
தமிழ்த் துறைத்தலைவர்,
திரித்துவக்கல்லூரி - கண்டி

மத்திய மலைநாட்டில் புகழ்பூத்த கல்லூரிகளில் திரித்துவக்கல்லூரி தனித்துவமானது, இக்கல்லூரி காலத்துக்குக்காலம் சிறந்த சான்றோர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டதாகத்திகழ்ந்திருக்கின்றது. இலங்கையில் புகழ்பூத்த ஓவியராகத்திகழ்ந்த டேவிட் பெயின்ரர் இக்கல்லூரியில் பணியாற்றி ஓவியத்துறைக்கு வளம் சேர்த்தது போல, இக்கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர் நா.செல்லத்துரை தமிழ் நாடகத்துறைக்கு அத்திவாரமாகவும், ஆணிவேராகவும் திகழ்ந்தார். திரித்துவகல்லூரியில் வேரோடிய நா.செல்லத்துரையென்ற நாடகவிருட்சம் விழுதெறிந்து மலைநாடு முழுவதும் வியாபித்திருந்தது. இக்கலைஞரின் பணிபற்றி காத்திரமான ஆய்வுகளோ, அறிமுகங்களோ வெளிவராத நிலையில் அவர் பணியாற்றிச் சென்ற கால்நூற்றாண்டுக்குப் பின்னராவது அவர்பற்றிய சில குறிப்புகளை எழுதக்கிடைத்தமை மனதிற்கு ஆறுதலைத்தருகின்றது.

யாழ்ப்பாணத்து நவாலியூரில் நாகமுத்து தெய்வயானை தம்பதிகளின் ஆறாவது கடைக்குட்டிப் புதல்வனாக 1929.10.06 இல் நா.செல்லத்துரை பிறந்தார். இவர் தமது ஆரம்ப இடைநிலைக்கல்வியை முறையே யாழ்ப்பாணக்கல்லூரி, கொழும்பு கதீட்றலஸ் கல்லூரி என்பவற்றில் பயின்றார். பின்னர் சென்னை அரசினர் கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியாக வெளியேறினார். 1957 இல் கற்றன் ஹலன்ஸ் கல்லூயில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் 1959 ம் ஆண்டு தை மாதம் கண்டி திரித்துவக்கல்லூரியின் தமிழாசிரியராக கடைமையேற்ற இவர் தொடர்ந்து 24 ஆண்டுகள் தமிழ்த்துறைத்தலைவராகக் கடைமைபுரிந்ததோடு தமிழ் இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடும் அக்கறையும் கொண்டு செயற்பட்டார். மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலம்தான் இவருக்குள் மறைந்து கிடந்த கலைஞன் என்ற மானுடநேயனை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தியது. சாதாரண ஆசிரியனாக திரித்துவக்கல்லூரியில் காலடியெடுத்துவைத்த நா.செல்லததுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியூரான் தமிழை ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றலுடையவர். பழந்தமிழ் இலக்கணங்களிலும், இலக்கியங்களிலும் பரிச்சியமிக்க இவர் ,எதுகை மோனை அணிசெய்ய, சந்தம் சிந்தும் செந்தமிழில்,அடுக்குமொழி அலங்காரம் செய்துவர,துள்ளலோசையுடன் தூயதமிழை நாடகப்பாணியில் கற்பிக்கும் ஆற்றல் பற்றி அவரது மாணவர்கள் இன்றும் சிலாகித்துப் பேசுவர். பழைய சங்கத்தமிழின் சாயலை இவரது பேச்சிலும் உரைநடையிலும் காணலாம். இலக்கியம், சரித்திரம், புராணம் போன்றவற்றை நாடகமாக்குவது இவருக்குக் கைவந்தகலை. நாடகக்கலைஞனாகவே அடையாளம் காணப்பட்ட நவாலியூரான் நாவல், சிறுகதை, கவிதை, இசைத்துறை எனப்பல்வேறு துறைகளிலும் பரிணமித்தவர் நாடகத்துறையில் பிரகாசித்த நவாலியூரான் "**முகைவெடித்தமொட்டுக்கள்**" என்ற சமூக நாவலையே முதன் முதலில் எழுதி வெளியிட்டார்.1968 இல் வெளியிடப்பட்ட இந்நாவல் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டது.இவரது நாடகத்துறை சார்ந்த ஈடுபாடும் அனுபவமும் நாவலையும் பாதித்திருந்தது. இந்நாவலைப்படிக்கும் ஒருவர் சினிமாக் கதையொன்றை வாசிப்பதுபோன்ற ஆவலையும் அருட்டுணர்வையும் பெறும்வகையில் நாவல் வேகமும் விறுவிறுப்பும் கலந்ததாகவே இருந்தது.

நவாலியூரானின் படைப்புகளில் விதந்து கூறத்தக்கதும்,பலராலும் சிலாகித்து பேசப்படுவதுமான " **சின்னவனா பெரியவனா?**" (1999) என்ற சிந்து நடைக்கூத்தும் புதிய பாணியில் படைக்கப்பட்டதாகும். கிறிஸ்தவ வேதாகமத்தில் காணப்படும் தாவீது கோலியாத்து வரலாற்றை, இனிய பாடல்களும் உரையாடல்களும் கலந்து படைத்துள்ளார். பொதுமக்களுக்கு மிகவும் பரிச்சியமான காத்தவராயன் மெட்டினைக் கையாண்டு,சிந்து நடைக்கூத்து எழுதியதன் மூலம் பிரசித்திபெற்றார்.

கொழும்பில் தமது தமயனாரான என்.சி. முருகேசு அவர்களோடு தங்கியிருந்து படித்த காலத்தில் (1951) இல் "சர்வாதிகாரி" என்ற நாடகத்தை நடித்ததன் மூலம் இத்துறையில் காலடியெடுத்து வைத்த நவாலியூரான், சென்னையில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த போது, சென்னை கலைக்கல்லூரியில் போட்டி நாடகங்களுள் இவர் எழுதி நெறிப்படுத்திய **திருந்திய மகன்'** என்ற சமூக நாடகம் முதலிடம்பெற்றுச் 'சிறந்த நடிகன்' என்ற விருதையும் இவருக்கே பெற்றுக்கொடுத்தது. இந்நிகழ்வுகள் இவரது கலைப்பயணத்தில் மைல் கற்களாகவே அவரால் நினைவுகூறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலியூரான் மரபுநாடகங்களிலே பெரிதும் நாட்டம்கொண்டிருந்தபோதும் நவீன உத்திகளை நாடகங்களிலே புகுத்தினார். பாடல்களுடன் நாடகத்தை நகர்த்துவது, காட்சிகளிடையே தாமதத்தைக் குறைப்பது,நடிகர்களை மேடையில் பிறை வடிவில் இயங்கபவைப்பது, நாடகங்களின் பின்னணி இசையாக வயலினை மீட்டுவது, வசனங்களை அறுத்துறுத்தி நிறுத்தி திருத்தித் தெளிவாக உச்சரித்துப் பேசும் முறையைக் கையாள்வது போன்ற உத்திகளைப் பெரிதும் கையாண்டதோடு, கல்லூரி மட்டத்திலும் வெளியிலும் இத்தகைய முறைகளைப் பயிற்றுவித்தார்.

இவர் தான் எழுதி நெறியாள்கை செய்த நாடகங்களை நூல் வடிவில் வெளியிடும் பணியிலும் ஈடுபட்டார். அவரது " உலகம் எங்கள் கைகளிலே " நாடகநூல் 1978 இல் வெளிவந்தது. இந்நூலைப்பற்றிக் கருத்துரைத்த அருள்திரு நேசநாயகம் அடிகளார்,

"நவாலியூரானின் கதாபாத்திரங்கள் நல்லகருத்துக்களைத் தருவனமட்டுமல்ல, கண்ணுக்குள் இழைபோடுவனவாகவும் அமைந்துள்ளன. இந்த ஆசிரியர், நாடக- சினிமாத்துறை எழுத்திலும் நடிப்பிலும் பாண்டித்தியம் உள்ளவர். இத்திறமைகள் ஒருங்கே இணைந்து படைக்கப்பட்டதுதான் இந்நூல் " எனக்குறிப்பிட்டமை இங்கு நோக்கத்தக்கது.

1970 இல் கண்டி மகளிர் கல்லூரியில் நாடக நிகழ்வொன்றின் மூலம் அறிமுகமான பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் ( டாக்டர் நந்தி ) தனக்கும் நவாலியூரானுக்குமுள்ள தொடர்பை, 'அவர் தயாரித்து நடித்த பூமியிலே சமாதானம் என்ற நத்தார் வானொலி நாடகத்தில் நானும் நடித்தேன். அதன் பின்பு அவரது **மயானம் காத்த மன்னன்** நாடகத்தில் விசுவாமித்திரனாக வந்தேன். அவர் அரிச்சந்திரன். அதன் புகைப்படம் என்னை நடிகனாக நாட்டிற்கு அறிமுகப்படுத்தியது. அந்தத்துணிவில் **நான் குரங்குகள்** என்ற இரண்டுமணி நேர நாடகத்தைத் தயாரித்து அதில் நடித்தேன். " எனக்குறிப்பிடுகின்றார்.

1971இல் அவரது **புதியதொருஉலகம்** என்ற சமுகஓரங்கநாடகம் திரித்துவக் கல்லூரிமேடையில் அரங்கேறியது.இந்நிகழ்வில் தலைமையேற்ற பேராதனைப்பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், பேராசிரியருமான சு. வித்தியானந்தன் தமது குறிப்பொன்றில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் நாடகத்தின் தரம் குறைந்துவிட்டதென்று கூச்சலிடுபவர்கள் இந்த நாடகத்தை வந்து பார்த்திருக்க வேண்டும் தமிழ் நாடகத்தின் தரம் குறையவில்லை. குறைந்துவிட்டதெனக் கூறுபவர்களின் கூற்றுப் பொய்த்துவிட்டது. என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் இருக்கின்றது புதியதொரு உலகம். இந்நாடக ஆசிரியர் நவாலியூர் நா. செல்லத்துரை ஒரே காட்சியில் நாடகங்களை வழங்கிய முதல்வர்களுள் ஒருவர் ஆவார்." ( வீரகேசரி 28.10.71 ) என எழுதியிருந்தார்.

நவாலியூரான் கண்டித்திரித்துவக் கல்லூரியில் பணிபுரிந்த (1959 - 1984) காலப்பகுதியில் ஏராளமான நாடகங்களை எழுதி,நெறியாழ்கை செய்து நடித்திருந்தார்.இந்நாடகங்கள் பலவற்றில் இவரே கதாநாயகனாகவும் நடித்தார். கண்டி,வத்தேகம, தெல்தெனிய, மாத்தளை, பன்விலை, மவுசாக்கல, அம்பிட்டிய, குருநாகல், கொழும்பு, போன்ற பிரதேசங்களில் இவரது நாடகங்கள் அரங்கேறின. இவர் எழுதியநாடகங்களை இலக்கியம்,வரலாறு, புராணம், சமுகம் என்ற பிரிவுக்குள் அடக்கலாம்.

**இலக்கிய நாடகங்கள்**: சிலையெடுத்தசேரன், வீரமகன், கச்சந்தமன்னன்.

**வரலாற்றுநாடகங்கள்**: காசியப்பா, கண்டியம்பதிக்காவலன், தாய்நாடு, எஸ்தர், சங்கமித்தா.

**புராண நாடகங்கள்** : பாவலன், உடன்பிறந்தஉணர்ச்சி, சகுந்தலை, அசோகவனம்,கண்ணீர்ப்படை,செங்கோல்.

**சமுக நாடகங்கள்** : நான் நடந்த பாதையிலே, எதற்குமொரு தீர்ப்பு, புதியதொரு உலகம்,எதிர்பாரா முடிவு, கலைக்கோயில், அடிமைவிலங்கு, ஜீவவெளிச்சம், நினைவுகள், நல்லதீர்ப்பு, நச்சு விதை, மனந்திருந்தி கேளுங்கள் கொடுக்கப்படும், புதியவாழ்வு, பழிக்குப்பழி, நீ திருந்து உலகம் திருந்தும், உம்முடைய சிலுவையிலே, யாம் ஆசை நிறைவேறும், எதை மன்னிப்பது, விலங்குகள், குமுறிவெடிக்கும் எரிமலை, தெய்வவாழ்வு, ஜீவனுள்ள நாட்களெல்லாம், சீதனப்பேய், உன்பாதையை மாற்றிவை, கல்வாரிக்காட்சி, பத்தினித்தெய்வம், சாபக்கேடு, நினைவுச்சின்னம், கொடு கொடுக்கப்படும் என்பனவாகும்.

நவாலியூரானின் பணி மலையகத்தோடு மட்டுப்படுத்தப்படவில்லை. திரித்துவக்கல்லூரியை விட்டு விலகி யாழ்ப்பாணம் சென்றபோது கலையுலகம் அவரை கைகூப்பி வரவேற்றது. யாழ் கன்னியர் மட மகாவித்தியாலயம், கரவெட்டி தேவரையாளிக்கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டைக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ் செயின்ற் பொஸ்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்பவற்றில் இவர் தயாரித்து நெறியாழ்கை செய்த நாடகங்கள் அரங்கேறின.

நாடகத்துறைப்பரிச்சயம் காரணமாக நவாலியூரானுக்கு சினிமாத்துறை இலகுவாகவே கைகூடியது. ஜெயீந்திராமுவீஸாரின் **காத்திருப்பேன் உனக்காக** திரைப்படத்திற்கு திரைக்கதை வசனம் பாடல்களை எழுதியதோடு அத்திரைப்படத்தில் வரும் சிவகுமாரன் ( கதாநாயகனின் தந்தை ) பாத்திரம் இவருக்கே வழங்கப்பட்டது. குணச்சித்திர நடிகரான நவாலியூரானின் நடிப்பு பலராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது. இலங்கையில் பலபாகங்களிலும் திரையிடப்பட்ட இப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது. மேலும், 1984 ஏப்ரல் மாதத்தில் அவர் கண்டியையும், கல்விச்சேவையையும் விட்டு யாழ்ப்பாணம் வந்தபோது, கந்தர் மடம் புலவர் செ. தெட்சணாமூர்த்தி அவர்கள் டாக்டர் நந்தி அவர்களின் சிபார்சின்பேரில் "**பூதத்தம்பி**"என்ற வீடியோப்படத்தில் இவரை போராளிகளின் தலைவன் புரட்சி வீரன் பூலோகசிங்கன் என்ற பாத்திரத்தில் நடிப்பதற்கான ஒப்பந்தம் செய்துகொண்டார். 1987 இல் இவ்வீடியோப்படம் வெளியிடப்பட்டது.

நாடகஆசிரியனாகக் கலையுலகில் கால்பதித்த நவாலியூரான்,கவிஞனாக, சிறுகதையாளனாக, நாவலாசிரியனாக, மெல்லிசை அமைப்பாளனாக, சினிமாநடிகனாக,எனப்பல்வேறு துறைகளிலும் பிரகாசித்தபோது, விருதுகளும் பட்டங்களும் அவரை தேடிவந்தன. புதுமை நடிகன், கலைமதி, சகலகலா வல்லவன், நடிப்பிசைத்திலகம், நாடகக்குரிசில், தமிழ்நாடகக் கலைத்திலகம், கலாபூசணம், கலைஞானச்சுடர், கலைமாணிக்கம் எனப் பல்வேறு பட்டங்களைக் கலையுலகம் வழங்கிக்கௌரவித்தது. இன்று அகவை 83 ஐ அடைந்திருக்கும் இவரது பணி தொடர்ந்தும் நாடக கலையுலகிற்கு கிட்டுவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதி தர்மன் போன்றவர்களை மீள உருவாக்கவது சாத்தியமா?

**ஆர். பரமேஸ்வரன்**
**உயிரியல் விவசாய துறைத்தலைவர்**

தலையங்கத்தின் குறிப்பிட்ட கேள்வியின் உண்மையான அர்த்தம் என்னவென்றால் அவர்களைப் போன்ற திறமை கொண்டவர்களை உருவாக்க முடியுமா? என்பதுதான். இந்தக் கேள்வி பலரின் மனதிலும் எழக்காரணமாக இருந்த ''ஏழாம் அறிவு'' திரைப்பட இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

'ஏழாம் அறிவு' திரைப்படத்துக்கு பிறகு போதிதர்மன் பற்றி இணையத்தளத்தில் தேடியவர்கள் ஏராளம், போதிதர்மன் கி.பி 6ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஒரு பல்லவ இளவரசன். அரசுப் பதவியை துறந்து பௌத்த துறவியாகி சீனதேசம் சென்றவர். 'மாசல் ஆட்ஸ்' எனப்படும் தற்காப்புக் கலையின் முன்னோடிகளில் ஒருவராகத் கருதப்படுபவர். கடுமையான தியானத்தில் ஈடுபட்ட ஞானி என்றெல்லாம் தகவல்கள் சொல்லுகின்றன.

போதிதர்மன் சரி, டொன் பிராட்மன், பிரான்சில் கிரிக் பற்றியும் உங்களில் பலருக்கொ சிலருக்கோ தெரிந்திருக்க வாய்பிருக்கிறது. டொன் பிரட்மன் கிரிக்கெட்டின் பிதாமகன் என்று போற்றப்படும் ஒரு அவுஸ்திரேலிய வீரர். டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் இவரது சராசரி ரன்கள் 99.94 ஆகும். எந்த ஒரு விளையாட்டை எடுத்துக்கொண்டாலும் இச்சாதனை அற்புதமானது என விமர்சிக்கப்படுகிறது.

பிரான்சிஸ் கிரிக்கை (Francic Crick) உயிரியல் கற்றவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். நான் இவரை மூன்றாவதாக தெரிவு செய்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. இவர் இக்கட்டுரைப் பொருளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். உயிரினங்களில் பரம்பரை இயல்புகளை சந்ததிக்க சந்ததி கொண்டு செல்லும் நிறமூர்த்தங்களின் அடிப்படைப் பதார்த்தமான டி.என்.ஏ.யின் கட்டமைப்பை ஜேம்ஸ் வாட்சன் உடன் இணைந்த 1953இல் கண்டறிந்தவர். இதற்காக இவரைகளுக்கு 1962 இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. வாட்சன் - கிறிக் என்ற இவர்களின் பெயர்கள் இணைந்தே சரித்திரத்தில் இடம்பிடித்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிஸ் கிரிக் ஒரு ஆங்கிலேயே மூலக்கூற்று உயிரியல் விஞ்ஞானி. வாட்சன் ஒரு அமெரிக்கர். டீ.என்.ஏ. யின் கட்டமைப்பை துணிந்த பின்னர் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள குடிபான உணவு விடுதியொன்றில் (Pub) பிரான்சிஸ் கிரிக் 'நாங்கள் உயிரின் இரகசியத்தை துணிந்துவிட்டோம் எனக் கூறினார்' அது மிகப்பெரிய உண்மையென ஆயிரம் தடவைகள் தலையிலடித்து சத்தியம் பண்ணமுடியும். 20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு அதுதான் என விஞ்ஞானிகள் குறிப்பிடுவது ஒன்றும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

இனி தலையங்கத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்க முன்பாகச் சில உயிரியல் தகவல்களை எளிமையாக பார்ப்போம். இந்த பூமியில் வாழும் உயிரினங்கள் யாவும் 'கலம்' எனப்படும். அடிப்படை கட்டமைப்பினால் ஆனவை தனிக்கலத்தால் ஆன உயிரினங்கள் தொடக்கம் பல கலங்களலான உயிரினங்கள் வரை உள்ளன. அமீபா என்ற உயிரினம் தனிக்கலத்தால் ஆனது முதிர்ந்த மனிதன் ஒருவனில் 60 டில்லியன் கலங்கள் ($60 \times 10^{12}$) காணப்படுகின்றன. உயிரினங்களின் அடிப்படை தொழில்கள் யாவற்றையும் ஒவ்வொரு கலமும் செய்கின்றது. கலம் பல்வேறு தொழில்களை செய்யும் கட்டமைப்புகளை (புன்னங்கங்கள்) தன்னகத்தே கொண்ட அமைப்பு இவற்றுள் பிரதானமான புன்னங்கம் ,கரு ஆகும்.

கருவினால்தான் கலத்தின் தொழிற்பாடுகள் யாவும் கட்டுப்படுத்தப்படுகிறது. கருவின் நிறமூர்த்தங்கள் எனப்படும் இழை போன்ற கட்டமைப்புகள் காணப்படுகின்றன. நிறமூர்த்தங்கள் டி.என்.ஏ (டீ ஓக்கி இரைபோ நியூக்கிளிக்கமிலம்) எனப்படும். இரசாயனச் சேர்வையிலானவை. இந்த DNAயில் தான் பாரம்பரியமாக கடத்தப்படும் தகவல்கள் சங்கேத பாஷையில் களஞ்சியப்பட்டுள்ளன.

மனித கலத்தின் கருவில் 46 நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றை 23 சோடி என்கிறோம். காரணம் ஒவ்வொரு சோடியிலும் உள்ள நிறமூர்த்தங்கள் ஒன்றையொன்று ஒத்தவை. இன்னும் சொல்லப் போனால் இவற்றுள் 23 நிறமூர்த்தங்கள் தந்தையிடமிருந்தும் 23 தாயிடமிருந்தும் குழந்தையை வந்தடைகின்றன.

''பரம்பரையலகு என்று அல்லது மரபணு எனக்குறிப்பிடப்படும் டி.என்.ஏ யின் ஒரு பகுதியே பாரம்பரிய இயல்பை தீர்மானிக்கும். ஒரு பரம்பரையலகு ஒரு இயல்பை தீர்மானிக்கலாம். உதாரணமாக மனிதனில் நாக்கை உருட்டக்கூடிய தன்மை ஒரு பரம்பரை அலகினால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு ஒரு இயல்பை ஒரு பரம்பரை அலகு தீர்மானித்தால் அவ்வியல்பின் மாறுபட்ட வடிவங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலேயே இருக்க முடியம். அதாவது நாக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருட்டக்கூடியவர்க்ள், உருட்டமுடியாதவர்கள் என இரண்டு வகை மட்டுமே இருப்பர். மனிதனின் குருதியினங்கள் ஒரு பரம்பரை அலகினால் தீர்மானிக்கப்பட்டது. A,B,AB,O என நான்கு வகை இனங்கள் மட்டும் தமக்கிடையே தெளிவான வேறுபாடு கொண்டு காணப்படுகின்றன. பெரும்பாலான இயல்புகள் பல பரம்பரை அலகின் கூட்டு விளைவினால் தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணமாக உயரம், நுண்ணறிவு, நிறை, தோலின் நிறம் போன்றவை பல்பரம்பரை அலகுகளினால் தீர்மானிக்கப்படுபவை இவ்வாறான இயல்புகளின் வெளிப்பாடு குறைந்த அளவில் இருந்து கூடிய அளவு வரை காணப்படும்.உதாரணமாக உயரத்தை எடுத்துக்கொண்டால் குட்டையானவர்கள் தொடக்கம் உயரமானவர்கள் வரை வேறுபட்ட உயரங்களில் மனிதர்கள் காணப்படுவர்.

கதைகளில் சொல்லுவார்கள், ஏழு கடல்கள் தாண்டி உள்ள தீவில் உள்ள கிளியின் உடலில் தான் மந்திரவாதியின் உயிர் இருக்கின்றது. என இங்கும் அப்படித்தான் உயிரின் இரகசியம் டி.என்.ஏ யில் தான் உள்ளது.

23 நிறமூர்த்தங்களை தந்தையிடமிருந்து பெறுகின்றோம் 23இனை தாயிடமிருந்து பெறுகின்றோம் எனவே தந்தையிடமிருந்து பாதியியல்புகளையும் தாயிடமிருந்து பாதி இயல்புகளையும் குழந்தை பெற்றுக்கொள்கிறதா? என்றால் இல்லை என்பதுதான் பதில் தந்தையிடமிருந்தும் தாயிடமிருந்தும் இயல்புகளை பெற்றுக்கொள்கிறது. ஆனால் புதிய இயல்புகளையும் பெற்றுக்கொள்கிறது. (இதற்கான விளக்கத்தை கட்டுரையின் நீளம் கருதியும் சாதாரண வாசகர்களுக்கு புரியாது என்பதாலும் தவிர்க்கின்றேன்.)

நுண்ணறிவு (Intelligent) மெய்வல்லுனர் ஆற்றல் (Athletes) அழகு என்பவற்றையெல்லாம் பரம்பரை அலகுகலே தீர்மானிக்கின்றன என்பதும் அப்பரம்பரை அலகுகள் சில இனங்காணப்பட்டுள்ளன என்பது உயிரியல் உலகின் உண்மைகள்.

ஒரு கிரிக்கட் வீரனின் மகனுக்கு கிரிக்கட் விளையாடக்கூடிய திறமை இருக்குமென்பது உண்மை. ஆனால் மகன் பயிற்சியினாலேயே அத்திறமையை பெறமுடியும்.

நுண்ணறிவு கொண்ட சத்திரசிகிச்சை நிபுனர் ஒருவரின் மகள் கற்றுத்தேர்ந்ததுதான் ஒரு சத்திரசிகிச்சை நிபுனராக வரமுடியும். மாறாக மகளின் அல்லது அவரது சந்ததியில் வந்த ஒருவரின் டி.என்.ஏ இனை தூண்டி ஒரு சில நாட்களில் மகளை ஒரு சத்திரசிகிச்சை நிபுணராக்க முடியாது.

இன்னும் சொல்ல போனால் ஒருவர் பயிற்சியின் மூலமோ கற்றல் மூலமோ பெற்றுக்கொண்ட திறமைகள் தலைமுறை உரிமை அடைவதில்லை. (அதாவது சந்ததிக்கூடாக கடத்தப்படுவதில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, 'ஏழாம் அறிவு' திரைப்படத்தில் போதிதர்மனின் சந்ததியால் வந்த இளைஞன் ஒருவனின் டி.என்.ஏ யினை தூண்டி போதிதர்மனில் காணப்பட்ட திறமைகளை ஒருசில நாட்களில் அந்த இளைஞனில் கொண்டு வருவது விஞ்ஞானத்தில் சாத்தியமில்லாத விடயம். மாறாக இளைஞன் பயிற்சி பெற்று கற்று போதிதர்மனின் திறமைகளை ஓரளவுக்காவது தன்னில் கொண்டுவந்திருக்கலாம். ஆக அவ் இளைஞன் சயோளின் கோயிலுக்கு (Shaolin Temple) பொய் பயிற்சி பெறுவதாக காட்டியிருக்கலாமோ?

எது எப்படி இருப்பினும் டி.என்.ஏ பரம்பரை அலகுகள் சந்ததிக்கூடாக இயல்புகள் கடத்தப்படுதல் பற்றிய விடயங்களை தமிழ் திரைப்பட ரசிகர்களை ஓரளவுக்காவது பேசவைத்ததில் இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் வெற்றிபெற்றுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும்.

- இக்கட்டுரை 25.12.2011 ஞாயிறு தினக்குரலில் வெளியானது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் திறந்திட வேண்டும்

ஸ்ரீமதி மனோகரி மயூரன்
B.Sc(Hons), PGDE, M.Phil(Biotech)

பூமியில் வாழ்கின்ற உயிரினங்களில் மனிதன் ஒரு சிறப்பு விலங்காகும். ஏனெனில் மனிதன் பகுத்தறியும் ஆற்றல் உடையவன். எல்லா அங்கிகளுக்கும் வளர்ச்சி ஒரு உயிரியல் செயற்பாடாகும். ஆனால் மனிதவளர்ச்சி பூரணமடைவது உடல், உள, சமூக வளர்ச்சியில் ஆகும். இன்று பூமி அறிவியலில் உன்னத நிலையில் உள்ளது என்பது மனித முயற்சியின் சாதனையாகும். இது டார்வினின் கூர்ப்புக் கொள்கைக்கமைய உயிர்கோளத்தில் மனிதனின் சராசரி ஆயுட்காலத்தை அதிகரித்துள்ளது. ஆனால் மனிதவாழ்க்கை என்பது உயிர் வாழுதல் மட்டுமல்ல. அந்தவகையில், சமூகமயமாக்கல் என்ற போர்வையில், வரலாற்றுப் படிகளாக இருந்த நாகரிகம் மனித இனத்தை ஆட்சி செய்வதற்கு நாமே பாத்திரவாழிகள். இதற்கான பிரதான காரணம் மனிதனுக்குள்ள பகுத்தறியும் ஆற்றல் நேர்ப்பெறுமான சிந்தனையில் பயணிக்கத் தவறியதாகும். மனித வளர்ச்சிக் கட்டத்தில் மாணவப் பருவம் உன்னதமானது. இன்றைய மாணவர்களே எதிர்கால சமுதாய சிற்பிகள். ஒரு தேசம் நிலைபேறாக நிலைத்து நிற்பதும், நிலைகுலைந்து போவதும் மாணவர்களின் நேர்ப்பெறுமான சிந்தனையின் செயலாற்றலில் தங்கியுள்ளது. ஏனெனில் ''இன்றைய மாணவன் நாளைய தேசத்தலைவன்''

நனோயுகத்தில் வீறுநடைபோடும் மனித இனத்தின் எதிர்கால இருப்பையே நிர்ணயிக்கவல்ல இன்றைய மாணவ சமுதாயத்தில், தொடர்ச்சியாகவும், அச்சுறுத்தும் வகையில் பெருமளவு ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. அதனால் மாணவர்கள் சிந்திக்கும் வகையில் இரு சொற்பதங்களை தெளிவுப்படுத்த விரும்புகின்றேன். அப்பதங்களாவன: கலாசாரம், நவநாகரிக மோகம் என்பனவாகும். கலா என்பது வளர்ந்து வருவது. வளர்ந்து வருவதனாலேயே சந்திரக்கலை என்று கூறுகின்றோம். அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரும்வரை சந்திரன் வளர்வது போல், வளர்ந்து வருவது கலாசாரம். இது ஒரு வடமொழிச் சொல்லாகும். கல்ச்சர் (Culture) என்பது ஆங்கிலச் சொல். இதன் தமிழ்ச்சொல் பண்பாடு என்பதாகும். கலா + ஆசாரம் = கலாசாரம் = பண்பாடு = Culture. பண்பாடு, புவிப்பரப்பு அல்லது நாடு, மொழி, இனம், சமயம், இடம் சார்ந்ததாக அமையலாம். பண்பாடுதான் மனிதனை மனிதனாக விளங்கவைக்கும். திருக்குறளில் பண்புடைமை எனும் ஒரு அதிகாரமே உண்டு, (குடியியல், அதிகாரம் 100).

''பண்புடையார் பட்டுண் டுலகம் அது வின்றேல் மண்புக்கு மாய்வது மன்''
(பண்புடைமை - 06)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கநூலாகிய கலித்தொகையில் ''பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'' என வருகிறது. உலகப்பாட்டினை அறிந்து ஒழுக வேண்டிய பண்பை அது விளக்குகிறது. பண்பாடு என்பதற்கு குரோபரும் (Kroeber) குளுக்கானும் (Kuluckohn) எழுதிய நூலில் 100க்கு மேற்பட்ட வரையறைகள் உண்டு. ஆன்மிகத்துறையில் மாத்திரமின்றி தமிழ், ஆங்கில, சமஸ்கிருத மொழிகளிலும் புலமை வாய்ந்த ஜகத்குரு காஞ்சி சங்கராச்சார்ய சுவாமிகளும் கலாசாரம் பற்றி ஒரு நேர்பெறுமான விளக்கத்தை தந்துள்ளார்.

நவநாகரிக மோகம் என நான் இங்கு வரைவிலக்கணப்படுத்த வருவது, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக, ஏற்பட்டுவரும் புதிய கலாசார மாற்றங்கள் மீது, எதிர்கால மனித இனத்தின் உடல், உள, சமூக ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், மறைப்பெறுமான சிந்தனையை வளர்க்கும் விதமாக உருவாகும் அதிதீவிரமான பற்று அல்லது மோகம் கொள்வதையே ஆகும். ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல் காலமாற்றத்தினாலே'' என்று கூறப்பட்டாலும், அப்புதியதை அதனால் ஏற்படும் பாதிப்பை பகுத்தறிவுக்கண் கொண்டு நோக்காது வாழ்வதைப் பற்றியே இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். இளைஞர்கள் நாகரிகத்துடன் பின்னிப் பிணைந்து வாழ்வதைத் தவறு என்று வாதிடவில்லை. ஏனெனில் நாகரிகத்தின் மீதுள்ள பற்றே மனித இனத்தின் மகத்தான வளர்ச்சிக்கு அடிகோலிற்று. ஆனால் நாகரிகம் என்ற தவறான சிந்தையில் கோமாளித் தனமாகச் செயற்படும் இன்றைய இளைஞர்களின் நாகரிக மோகத்தைத்தான் நான் தவறு என்கின்றேன். உதாரணமாக, இன்றைய தமிழ்பேசும் மாணவர்களிடையே களவு சினிமா நாயகனாகவுள்ள தனுசின் "Why this கொலைவெறி" என்ற பாடல் உலக பிரபல்லியமாக இருப்பதனால், ஒரு கலை நிகழ்வொன்றில் இதனை அரங்கேற்ற முடியுமா? மொழி மனிதனின் ஆன்மா. நாம் தமிழ் அன்னையின் குழந்தைகள் என்பதில் சிறுமைக்கு இடமில்லை. நாம் தமிழர்கள் என்பதில் சிறுமைப்படும் மறைப்பெறுமான மனோபாவம் உள்ளவர்கள் அவ்வினத்திலிருந்து முற்று முழுதாக விழுகியிருப்பது சிலாக்கியமாகும். இதன் மூலம் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை இப்பூமி தரிசிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வின் மனவெழுச்சிகளின் தாக்கம்

**திருமதி. எஸ்.ஐ.வி. பாலேந்திரன்**
B.A(Hons), PGDE.

மனிதன் சாதாரணமாக ஒரு உணர்ச்சி பிளம்பு. அவனோடு உணர்ச்சிகள் இரண்டறக் கலந்தவை. மனிதரில் இயல்பான பல உணர்ச்சிகள் காணப்படுகின்றனர். இவ்வுணர்ச்சிகளில் பாதகமானவையும், சாதகாமானவையும் காணப்படுகின்றன. இவ்வுணர்ச்சிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மனவெழுச்சிகளாக அல்லது தீவிரமனவெழுச்சிகளாக மாறுகின்றன. ஒருவன் தான் விரும்பும் அல்லது பற்றுவைக்கம் ஒரு விடயத்தின் காரணத்தினாலோ அல்லது அவன் தீவிரமாக வெறுக்கும் ஒருவிடயத்தின் காரணமாகவோ மனவெழுச்சிக்குள்ளாகலாம். மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் மனம் அல்லது உள்ளமானது பாதிக்கப்படும் போது மனவெழுச்சிகள் தோன்றுகின்றன. ஒரு மனிதன் தான் அடைய வேண்டிய இலக்கை அடையமுயற்சிக்கும் போது ஏற்படக்கூடிய இயல்பான மற்றும் தோற்றுவிக்கப்படும் தடைகள் அவனில் மனவெழுச்சிகளை உருவாக்குகின்றன. கருவறையிலிருந்து கல்லறைவரை மனவெழுச்சிகள் மனிதனை வழிநடத்துகின்றன. மனிதன் பரந்த உணர்ச்சிக் கடலில் மிதக்கும் ஓர் அறிவுத்துரும்பு என ஒருவர் குறிப்பிடுகிறார். எவ்வளவு அறிவு படைத்தவனையும் இலகுவாக உணர்சிகள் ஆட்டிப்படைகின்றன.

மனவெழுச்சியாக மாறக்கூடிய சாதகமான உணர்ச்சிகளாக, அன்பு, சந்தோஷம், கடவுள் பயம், நன்றியுணர்வு, மரியாதையுணர்வு பாசஉணர்வு, காதலுணர்வு போன்றவற்றைக் கொள்ள முடியும். இவ்வுணர்சிகள் ஆரோக்கியமாக கட்டுப்பாட்டுடன் குடும்ப சமூக மற்றும் விழுமியங்களுக்கு உட்பட்டமுறையில் முன்னெடுக்கும் போது சாதகமான விளைவுகளைக்கொண்டு வரும்.

அதேவேளையில் மனவெழுச்சியாக மாறக்கூடிய பாதகமான உணர்ச்சிகளாக கோபம், எரிச்சல், பொறாமை, பழிவாங்கல், பயம், வெறுமை, கவலை, வெட்கவுணர்வு, குற்றவுணர்வு, கசப்பு, தனிமையுணர்வு போன்றவற்றைக் கொள்ளலாம். இப்பாதகமான உணர்ச்சிகளை நெறிப்படுத்த தவறுகின்றபோது அவை தீவிர மனவெழுச்சிகளாக பூதாகரமாகி மனித வாழ்க்கையை பாழ்படுத்திவிடுகின்றன. பாதகமான உணர்ச்சிகள் முதலில் எம்மைத்தாக்குகின்றன. இரண்டாவதாக எம்மைச் சூழ இருப்பவர்களைத் தாக்குகின்றன. எமது ஆளுமையும் பாதித்து ஏனையோரின் ஆளுமையையும் பாதிக்கின்றன.

சாதகமான மனவெழுச்சியினால் நன்மைகள் பலவுண்டு இறையண்பு, சகோதர அன்பு, பாசம் போன்றவற்றைத் தூண்டுகின்றன. சூழலை அழகுபடுத்த இயற்கையை இரசிக்க தவறாணவற்றையும் அசுத்தமானவையையும் வெறுக்கவும் மனவெழுச்சி உதவுகின்றது. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றையும் ஊக்குவிக்கின்றன. அர்ப்பணம், தியாகம், சுதந்திர வேட்கை, தன்னலமற்ற வாழ்வு போன்றவற்றிக்கும் மனவெழுச்சிகளே காரணமாகும். ஓவியம், கவிதை, நடனம், இசை, நாடகம், இலக்கியம் சமய நிகழ்வுகள் ஆகியவற்றை இரசித்து மகிழ மனவெழுச்சி உதவுகின்றன. ஆரோக்கியமான நெறிப்படுத்தப்பட்ட மனவெழுச்சிகள் மனிதவாழ்வை சீராக்கி உயர்வடையச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி ஏற்படும் மனவெழுச்சிகள் மனித உடலில் பாதிப்புக்களைக் கொண்டுவரக்கூடும். சில ஓமொன் சுரப்புகளில் மாற்றங்கள் ஏற்பட வழியுண்டு. உதாரணமாக தீவிரப்பயம் ஏற்படும் போது உமிழ்நீர் சுரப்பு தடைப்படும். கோப உணர்ச்சி ஏற்படும் போது இதயத்துடிப்பு அதிகரிக்கும், இரத்த அழுத்தம் அதிகரிக்கலாம், வைராக்கியம் கசப்பு ஏற்படுவதனால் வயிற்றுப்புண் போன்றவை ஏற்படலாம். தீவிர மனவெழுச்சிகள் ஒருவனைத் தீவிரமாக செயற்பட வைத்து ஆபத்தில் அவனை வீழ்த்தலாம் அல்லது அவனை இயங்காமல் முடக்கிபோடலாம்.

**மனவெழுச்சிகளை நெறிப்படுத்தல்.**

பாதமான மனவெழுச்சிகள் தீவிரமடையும் போது தீவிர மனப் போராட்டங்கள் ஏற்படுகின்றன. தீவிர மனப் போராட்டங்கள் தொடரும் போது அல்லது நீடிக்கும் போது மனித ஆளுமையின் சமநிலை பாதிப்படைகிறது. மனிதவாழ்வில் ஏற்படும் தகாத மனவெழுச்சிகளை நெறிப்படுத்த சிலமுறைகள் கையாளப்படுகின்றன. முதலாவதாக சிலர் மனமுவந்து உள்ளடக்குவர்.(Supress) இரண்டாவதாக சிலர் பலவந்தமாக உள்ளடக்குவர் (Repress). மூன்றாவதாக அநேகர் இவ்வுணர்ச்சிகளை உடன் வெளிகாட்டுவர் (Express). நான்காவதாக சிலர் இவ் உணர்ச்சிகளை ஏற்றுக்கொண்டு அறிக்கையிடுவர் (Accept & Confess) இந்த நான்காவது வழியே அதிக நன்மை பயக்கும். பாதகமான உணர்ச்சிகளை ஏற்றுக்கொண்டு அவற்றை கடவுளுக்கும் மற்றவர்களுக்கும் முன்பாக அறிக்கையிட்டு மன்னிப்புகோரி பொறுப்புள்ள விதத்தில் அவற்றிலிருந்து விடுபடக்கூடிய வழிமுறைகளைத் தேடி பின்பற்றுவதே ஆரோக்கியமான செயற்பாடாகும். மனவெழுச்சிகளை நெறிப்படுத்துவதன் மூலம் அசாதாரண நடத்தை கோலங்களில் இருந்து ஒருவன் விடுதலை பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க முரசு

திரித்துவோதயம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இலக்கிய மன்றம் - 2011/ 2012
## திரித்துவக்கல்லூரி கண்டி

**சிரேஷ்ட ஆலோசகர்** ~

திரு. E.G.J. கனகசபை

**பொறுப்பாசிரியை** ~

ஸ்ரீமதி மனோகரி மயூரன்

**ஆலோசகர்** ~

திரு. R. சிவலிங்கம்

**தலைவர்** ~

எம்.யூ.எம். ஹுமைத்

**செயலாளர்** ~

ஆர்.எம்.டில்ஷான்

**உப தலைவர்** ~

எம்.ஐ.எம். இன்ஷாப்

**உப செயலாளர்** ~

எம்.எஸ். ஷபீர் அஹ்மத்

**பொருளாளர்கள்** ~

எம்.பீ.டீ.குரூஸ்
பி.பிரவீன் பிரகாஷ்
ஜி.லுஷான்த்

**இதழாசிரியர்கள்** ~

எம்.எஸ். முஹம்மத் அக்ரம்
ஆர். மதுஷான்
ஏ.கே. கௌரிஷங்கர்
எம். முகேஷ்

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்**

வி.கோபிஆனந்த்
டொம் மொரிசன்
பி.ஸ்ரீ. செந்தூரன்
ஜே. சுரேன்
கே.ஜி.நடராஜா
எம். எம். அஹமத் முஸ்தாக்
எல். ஏ. மோகன்

**செயற்பாட்டு குழுவினர்** ~

வி.பிரசன்னா
எம். என். எம். நபீஸ்
எஸ். பிரதீபன்
பி.லக்ஷித்
ஏ.எம்.எம். இன்ஷாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்றத்தின் பரிமாணம் - சில பதிவுகள்

ஆர். பரமேஸ்வரன்
உயிரியல் விவசாய துறைத்தலைவர்

ஊமையாய் செவிடர்களாய் குருடர்களாய் வாழ்கின்றோம்.
ஒரு சொற்கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்.

- பாரதி -

தமிழை யாரும் வளர்க்க தேவையில்லை அது தானாகவே வளரும் என தமிழ்க் கல்விமான்கள் பலர் குறிப்பிட்டிருக்கின்றார்கள். குழந்தை தானாகவே வளரும் என்றாலும் அதற்கு புத்தாடை அணிவித்து பூச்சூடி அலங்காரம் செய்து நாம் மகிழ்வதில்லையா அதைத்தான் உலகம் பூராகவுள்ள தமிழ் அமைப்புகள் செய்து வருகின்றன.

தமிழின் இனிமையில் நனைவது ஒரு சுகமான அனுபவமல்லவா. கல்லூரியின் தமிழ் இலக்கியமன்றமும் மாணவர்களிடையே தமிழின் மகிமையையம் மகத்துவத்தையும் எடுத்துச் செல்லும் அமைப்பாகவும், மாணவர்களை தமிழில் தேர்ச்சி பெறவைக்கும் அமைப்பாகவும் செயலாற்றிவருகிறது.

திரித்துவக்கல்லூரி 1872 ஆம் ஆண்டு அருட்தந்தை அயர்லண்ட் கொலின்ஸ் இனால் நிறுவப்பட்ட கிறிஸ்தவ பாடசாலை 140 வருட காலத்தை பூர்த்தி செய்யும் திரித்துவக்கல்லூரி மூவின மக்களுக்கும் கல்விச் சேவையாற்றி குறிஞ்சி நிலமாம் கண்டியில் கல்விக் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையான கூற்றல்ல.

1919ஆம் ஆண்டு ''தமிழ் கல்வி அபிவிருத்தி சங்கம்'' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் இலக்கிய மன்றமாக ஆலவிருட்சமாக வேரூன்றி நிற்கும் மன்றத்தைப் பற்றிய சில வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**தோற்றம்**

திரித்துவக்கல்லூரியின் ஏழாவது அதிபராக கடமையாற்றிய திரு. ஏ. ஜி. பிரேசர் இன் பதவிக்காலத்தில் 1919 ஆம் ஆண்டு தைமாதம் ''தமிழ் கல்வி அபிவிருத்தி சங்கம்'' என்ற பெயரில் தனது தமிழ் பணியை மன்றம் ஆரம்பித்தது.

அதிபர் ஏ.ஜி.பிரேசின் காலமே கல்லூரியின் பொற்காலமாக வர்ணிக்கப்படுகிறது. இக்காலகட்டத்தில் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை மனங்கொள்ளத்தக்கது.

சங்கத்தின் முதலாவது பெரும்தலைவராக கடமையாற்றியவர் திரு.ஏ.எம். குமாரசாமி

சங்கத்தில் மொத்தம் 49 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் இடம்பெற்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மத்தியில் தமிழ் இலக்கிய கல்வியை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் சங்கத்தின் நோக்கமாக முதலாவது ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுருக்கிறது.

(சங்க உத்தியோக்ர்களின் விபரம் இணைக்கப்பட்டுள்ளது)

தலைவருடன் செயலாளர் சின்னையா, உதவி செயலாளர் எம்.பி. பொன்னுசாமி உதவிதலைவர்கள் ஜே. பிளியல், தோமஸ் போன்றோர் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்துள்ளார்கள்.

**தோற்றம் முதல் வெள்ளிவிழா (1919–1944)**

ஆரம்ப காலத்தில் தமிழ் நூல்களுக்கு இலங்கையில் தட்டுப்பாடு நிலவியதைக் கண்ட சங்கம் தமிழ் நாட்டிலிருந்த தரமான நூல்களை வரவழைத்து மாணவர்களிடையே பகிர்ந்தளித்துள்ளது.

பொதுக் கூட்டங்களில் விவாதங்களும், தமிழ்பேச்சாளர்களின் உரைகளும் இடம் பெற்றுள்ளன.

அதிபர் ஜெ. மதிவியட் கெம்பல் (1924-1935) காலத்தில் அதிபரின் உதவிகளால் சங்கம் மேலும் தளைத்தோங்கியது.

1930 இல் சங்கப் பெருந்தலைவராக திரு. ஜி.வை. சகாயம் பொறுப்பேற்றுள்ளார். கண்டிப்புக்கு பெயர்போன திரு. ஜி.வை.சகாயம் காலத்தில் சங்க நடவடிக்கைகள் மேலும் அபிவிருத்தியடைந்துள்ளது.

1935 இல் கல்லூரிக் கீதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இசைக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழி மூலக்கல்வி நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் ஆங்கிலேயர்களால் நிருவாகிக்கப்பட்ட ஒரு கல்லூரியில் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

1944 இல் கல்லூரி அதிபராக விளங்கிய முதல் இலங்கையரான திரு.சி.இ சுமித்திராச்சி அவர்களின் காலத்தில் சங்கப்பெருந்தலைவராக திரு. என். சண்முகம் இருந்த போது சங்கம் தனது வெள்ளி விழாவை சிறப்பாக கொண்டாடியுள்ளது.

**வெள்ளிவிழா முதல் பொன்விழா (1944 – 1969)**

1945 இல் முதல்தடவையாக மாணவர் ஒருவரை உபதலைவராக நியமிக்கும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. 1945 இல் முதலாவது மாணவ உபதலைவராக ஆர்.திருகோசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக தெரிவானவர் எம். எஸ். வீரசிங்கம்.

1953 இல் சங்கப் பெருந்தலைவராக திரு. சுப்பிரமணியம் பெறுப்பேற்றார்.

1953 இல் மாணவ உபதலைவராக டி.எஸ். ராஜலிங்கம் கடமையாற்றியபோது ''தமிழ் ஓசை'' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

1957 இல் திரு. சுவாமிநாதன், திரு. சுந்தரமணி ஆசிரியர்கள் கல்லூரியை விட்டு விலகிச் சென்றமை சங்க நடவடிக்கைகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

1961ம் ஆண்டு ஆனிமாதம் 3ம் திகதி சங்கத்திற்கு புதிய யாப்பு இயற்றப்பட்டு சங்கம் புதிய பொலிவுடன் வீறுநடை போடத் தொடங்கியது.

1961ம் ஆண்டு திரு. மரியதாஸ் அவர்கள், கல்லூரியை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகியமையும் 1962 இல் திரு. ஞானமாணிக்கம் அவர்கள் காலமானதும் சங்கத்துக்கு பேரிழப்பாக அமைந்தது.

1962 இல் ஆசிரயர் நவாலியூர் எஸ். செல்லத்துரையார் வருகை சங்கத்திற்கு பெரும் பலம் சேரத்தது.

1963 இல் திரு. முத்தையா அவர்கள் பெரும்தலைவராக பொறுப்பேற்றார்.

1969ம் ஆண்டு ஏறத்தாழ 158 மாணவர்களை தனது அங்கத்தவர்களாக கொண்டிருந்த சங்கம் தனது பொன்விழாவை ஆடிமாதப் 28ம் திகதி கோலாகலமாக கொண்டாடியது. பொன்விழாவின் பிரதம அதிதியாக கல்லூரி அதிபர் திரு. இ.எல். பெர்ணான்டோ கலந்து சிறப்பித்தார். சிறப்பு பேச்சாளராக திரு. ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டார். கல்லூரி மண்டபத்தில் விளக்கும் ஒளிர, நாதஸ்வர இசை முழங்க, ஆரம்பமான விழாவில் பார்வையாளர்களை உவப்பில் ஆழ்த்தி, இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. ''பொன்விழா மலர்'' ஒன்றும் அங்கு வெளியிடப்பட்டது. பொன்விழா நிகழ்ச்சிகளிலும், மலர் வெளியீட்டிலும் நாவலியூர் என். செல்லத்துரையின் பங்களிப்பு மகத்தானது.

1969 இல் கல்லூரியின் உபஅதிபராக கடமையாற்றிய வரும் பெருந்தலைவராகவும் இருந்து பெரும் பணியாற்றியவருமான திரு. ஜி.வை. சகாயம் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.

1969இல் சங்கத்தின் வளர்ச்சிகளில் முக்கிய பங்கு வகித்த நாவாலியூர். என். செல்லத்துரையின் ''முகை வெடித்த மொட்டு'' சாகித்திய விழாவில் முதலிடம் பெற்றமை சங்கத்துக்கு பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்தது.

மேலும், சங்கத்தின் வளர்ச்சியில் ஆசிரியர்கள் திரு. போல் ஜெயராஜ். திரு. ஆர். சி. இராஜேந்திரன்,

திரு. பி.ரி. இராஜேந்திரன் ஆகியோரின் வழிகாட்டல்கள் காலத்தால் உயர்ந்தவை.

## பொன்விழா முதல் வைரவிழா வரை (1969 - 1979)

1972 முதல் இரண்டு தவணைகளுக்கு சங்கப் பெருந்தலைவராக திரு. எஸ்.ராஜேந்திரம் கடமையாற்றி விட்டு வெளிநாடு சென்றார்.

1972 மூன்றாம் தவணை முதல் திரு. ஏ. ஆனந்தராஜா சங்கப் பெருந்தலைவராக பொறுப்பேற்றார். அவ்வாண்டில் ''மணமான பெண்களுக்கு (மனன வேலையே சிறந்தது.') என்ற தலைப்பில் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளுடன் எமது மாணவர்கள் விவாதமொன்றில் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களின் வாதத்திறமை பெரிதும் பாராட்டுப் பெற்றது.

1973 இல் முதலாந் தவணைக்கு பெருந்தலைவராக திரு. எஸ். வைகுந்த வாசன் அவர்களும் இரண்டாம் தவணைக்கு திரு. ஏ. ஆனந்தராஜாவும் விளங்கினார்.

1973 இல் சங்கம் தனது 54 வது ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவிற்கு பிரமத அதிதியாக கலாநிதி. சு. வித்தியானந்தன் கலந்து கொண்டு சிறப்பித்தமை சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயம் எனலாம்.

1975 இல் பெருந்தலைவராக திரு. ஏ. அழகக்கோன் கடமையாற்றியபோது சங்கம் தனது 56வது ஆண்டு விழாவை சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடியதுடன் ''விழா மலர்'' ஒன்றையும் வெளியிட்டது.

திரு. ரி. கிறிஸ்டி சங்கப் பெருந்தலைவராக கடமையாற்றிய காலம் (1976) சங்க வரலாற்றில் முக்கிய ஆண்டாக அமைந்தது. இவ்வாண்டில் சங்கம் நாடகத்துறையில் அதிக கவனம் செலுத்தியது.

நாடக விற்பன்னரான நவாலியூர் என். செல்லத்துரையின் எழுத்து, இயக்கத்தில் உருவாகி மாணவர்களும் ஆசிரியர்களும் நடித்த ''இராஜவிசுவாசம்'' என்ற கற்பனை கலந்த வரலாற்று நாடகமும் 'சாபக்கேடு'' எனும் சமூக நாடகமும் 1976 இல் மேடையேற்றப்பட்டு பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றன.

இந்நாடகக்கலை மாணவர்களுடன் ஆசிரியர்களான நவாலியூர் என். செல்லத்துரை, திரு. ஜோதி டானியல், திரு. குயின்டைன் ஜோர்ஜ், செல்வி ஜெயா சிதம்பரம், செல்வி. சிவாந்தி சிவஞானம் ஆகியோர் பங்கேற்றினர்.

1976 இல் சுபாஷினி வேலுப்பிள்ளை என்ற மாணவி முதல் தடவையாக சங்கத் தலைவியாக செயற்பட்டுள்ளார். இவர் முதலாம் தவணைக்கு மட்டும் கடமையாற்றினார்.

1977 முதல் இரண்டு தவணைகளுக்கு சங்கப் பெருந்தலைவராக திரு. ஜோதி டானியல் அவர்களும் மூன்றாம் தவணைக்கு திரு. வின்ஸ்டன் தங்கராசாவும் திகழ்ந்தனர்.

1977 இல் கல்லூரி பரிசளிப்பு விழாவில் ''சிக்கிய சிலைகள்'' என்ற நகைச்சுவை ஊமை நாடகமொன்று மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் அப்போதைய உப அதிபராக இருந்த திரு. டானியலின் வேண்டுகோளுக்கு இணங்க புஸ்பதான மகளிர் கல்லூரியில் மீண்டுமொரு முறை மேடையேற்றம் செய்யப்பட்டது.

1978 இல் சங்க பெருந்தலைவராக திரு. வி. தங்கராசா கடமையாற்றியபோது சங்கம் தனது 59ஆவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடியது.

இதன்போது மாணவ தலைவராக இருந்தவர் எம். பி. முகுந்தன் செயலாளர் எம். ரி. இரவீந்திர நாத் ஆவார்.

59வது ஆண்டு விழாவில் பிரதம அதிதி நரம்பு சிகிச்சை நிபுணர் கலாநிதி. சுப்பிமணியம் கலந்து கொண்டார்.

1979 இல் தவிர்க்க முடியாத காரணங்களால் தனது வைரவிழாவை தமிழ்ச்சங்கத்தினால் கொண்டாட முடியாமல் போனது.

### வைரவிழா முதல் - பவளவிழா வரை (1979 - 1993)

1980 இல் நாடகவித்தகன் நவாலியூர் என். செல்வத்துரையை பெருந்தலைவராக பெற்றதமை தமிழ்ச்சங்கம் பெருமை கொண்டது.

1980 இல் தமிழ் இலக்கிய சங்கம் இரண்டு அவைகளாக தோற்றம் பெற்றது. 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்காக ''செந்தமிழ் சிற்றவையும்'' சிரேஷ்ட மாணவர்களுக்காக ''பைந்தமிழ் பேரவையும்'' உருவானது.

செந்தமிழ் சிற்றவையின் தோற்றம் கனிஷ்ட மாணவர்களின் ஆர்வமான செயற்பாடுகளுக்கு வழிவகுத்தது.

1981- 1983 காலப்பகுதியில் பைந்தமிழ் பேரவையின் பொறுப்பாசிரியராக திரு. எஸ். வைகுந்தநாதனும் செந்தமிழ் சிற்றவையில் பொறுப்பாசிரியராக திரு. என். செல்லத்துரையும் பணிபுரிந்தனர்.

1983 இன் இறுதிப்பகுதியில் ''கலைவிழா'' ஒன்றை நடாத்த திட்டமிட்ட போதும் ஆடி மாத இனக்கலவரம் காரணமாக இது சாத்தியப்படாமல் போனது. இனக்கலவரம் காரணமாக ஏராளமான தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரியைவிட்டு வெளியேறினர்.

1983 இன் இறுதிப்பகுதியில் திரு. என். வைகுந்தநாதன் கல்லூரியை விட்டு விலக தமிழ்ச்சங்கம் அவருக்கு பிரியாவிடை கூறநேர்ந்தது.

1983 இறுதிப்பகுதியில் திரு. எஸ். லோகநாதன் சங்கப் பொறுப்பாசியராக கடமையேற்றார்.

1984 ஆம் ஆண்டு முதலாந் தவணையில் கல்லூரியில் 25 வருடங்களாக கடமையாற்றி தமிழுக்கும், தமிழ்ச்சங்கத்தக்குப் பெரும்பணி செய்த நல்லாசான் நவாலியூர் என். செல்வத்துரையில் பிரிவு சங்கத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அமைந்தது.

1984 இரண்டாம் தவணையில் செந்தமிழ் சிற்றவையின் பொறுப்பாசிரியராக எஸ். சிவஞானமூர்த்தி பொறுபேற்றார்.

1985ம் ஆண்டில் செந்தமிழ் சிற்றவையின் பொறுப்பாசிரியராக திருமதி. என். மகாலிங்கமும் தொடர்ந்து அதே ஆண்டில் இரா. சிவலிங்கமும் பொறுப்பேற்றனர்.

1987 இல் பைந்தமிழ் பேரவையின் பொறுப்பாசிரியராக இரா. சிவலிங்கமும், செந்தமிழ் சிற்றவையின் பொறுப்பாசிரியராக திருமதி. ஜெ. சிவராஜாவும் பொறுப்பேற்ற பின் சங்கம் புதுத்தென்புடன் செயல்பட ஆரம்பித்தது.

1987 இல் சங்கத்தினால் ''கலைவிழா'' சிறப்பாக நடாத்தப்பட்டது. இதன்போது தலைவராக என். நிரஞ்சனும் செயலாளராக எம். எஸ். அஸ்ரப்பும் செயற்பட்டனர். கலைவிழாவில் திரு. என். சிவகுமாரனின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட ''திக்கு விஜயம்'' என்ற நாடகம் பலராலும் பாராட்டுப்பெற்றது.

1988, 89ம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய பதற்ற நிலை காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டதால் சங்கம் தனது பணியை தொடர முடியாத ஒரு நிலை ஏற்பட்டது.

1992 மாசி மாதம் முதலாந்திகதி மீண்டும் ''கலைவிழாவுக்கு'' புத்துயிர் அளிக்கப்பட்டது. இதன்போது மாணவர்கள், ஆசிரியர்களின் படைப்புகளை தாங்கிய ''திரித்துவோதயம்'' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகையின் உதயத்திற்கு இரா. சிவலிங்கம் அவர்களே உந்து சக்தியாக இருந்தார். கலைவிழாவின் பிரதம அதிதியாக அதிபர் கெப்டன் எல். எம். டி. அல்விஸ் கலந்து சிறப்பித்தார். இக்கால கட்டத்தில் பைந்தமிழ் பேரவையின் பொறுப்பாசிரியராக இரா. சிவலிங்கமும் செந்தமிழ் சிற்றவைக்கு பொறுப்பாக திருமதி. பி.மகேந்திரனும் செவ்வனே கடமை செய்தனர். சங்கத் தலைவராக எம். எம். ரிபாஸ் உபசெயலாளராக எஸ். சந்திரசேகரும் கடமையாற்றினர்.

1992 இல் சங்கத்துக்கு கலைத்துறையில் பெரும் உதவிகளை நல்கிய ஆசிரியர் திரு. வி. விக்னமூர்த்தி காலமானமை சங்கத்தை பெரும் துயரில் ஆழ்த்தியது.

1992 இல் இன்னுமொரு முக்கிய நிகழ்வு நடைபெற்றது. தமிழ் இலக்கியமன்றம் மூன்று அவைகளாக உருவெடுத்தது.

| | | |
|---|---|---|
| ஆண்டு 6 - 8 மாணவர்கள் | - | செந்தமிழ் சிற்றவை |
| ஆண்டு 9 - 11 மாணவர்கள் | - | பைந்தமிழ் பேரவை |
| ஆண்டு 12 - 13 மாணவர்கள் | - | செந்தமிழ் பேரவை |

எனும் மூன்று அவைகளுக்கு உள்வாங்கப்பட்டனர்.

இவ்வாறான மூன்று அவைகளின் தோற்றம் ஏராளமான மாணவர்கள் மன்ற செயற்பாட்டில் ஈடுபட வழி வகுத்தது. இக்கால கட்டத்தில் மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி தமிழறிவை வளர்த்ததுடன் இயற்கை அழிவுகளால் நாட்டில் பாதிப்படைந்தவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் கைகொடுக்க தயங்கவில்லை. தமிழ் இலக்கிய சங்கம் றோயல்கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி, மோபிறே கல்லூரி, கண்டி உயர்தரப் பாடசாலை, கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி என்பவற்றுடன் விவாதப் போட்டிகளை நடாத்தி பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கியது.

1993 - 1996 காலப்பகுதியில் பின்வரும் ஆசிரியர்கள் மூன்று அவைகளினதும் பொறுப்பாசிரியர்களாக கடமையாற்றினார்.

| | | |
|---|---|---|
| பைந்தமிழ் பேரவை | - | திரு. இரா. சிவலிங்கம் |
| செந்தமிழ் பேரவை | - | திருமதி. கே.ஜே.பாலசுந்தரம் |
| செந்தமிழ் சிற்றவை | - | திருமதி. பி. மகேந்திரன் |

இக்காலக்கட்டத்தில் மன்ற தலைவர்களாக டி.தேவதாசன் (1994) கி.பி. சுரேந்திரன் (1996) பணிபுரிய செயலாளர்களாக முறையே எஸ். மயில்வேந்தன், எம். ரிசாட் கடமை புரிந்தனர்.

1994ம் ஆண்டு மன்றம் நடாத்திய முத்தமிழ் விழாவில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. சி. தில்லை நாதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார் இவ்விழா அனைவரினதும் பாராட்டுக்களை குவித்தது.

1997 - 2000 வரையான காலப்பகுதியில் அவைகளின் பொறுப்பாசிரியர்களாக பின்வரும் ஆசிரியர்கள் கடமையாற்றினர்.

| | | | |
|---|---|---|---|
| பைந்தமிழ் பேரவை | | - | திருமதி. ஜெ.சிவராஜா |
| செந்தமிழ்ப் பேரவை | | - | திரு.இரா. சிவலிங்கம் |
| செந்தமிழ சிற்றவை | (1997 - 1999) | - | திருமதி. பி. மகேந்திரன் |

1999 இல் திருமதி. பி. மகேந்திரன் புலப்பெயர்ந்து சென்றமையில் சிற்றவையின் பொறுப்பாசிரியராக திருமதி. கே.ஜே. பாலசுந்தரம் நியமிக்கப்பட்டார்.

1997ம் ஆண்டு நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்கு பிரதம அதிதியாக கல்லூரியின் பழைய மாணவரும் அப்போதைய கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளருமான கலாநிதி. இராமானுஜம் கலந்து கொண்டார்

2000ம் ஆண்டு நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி. எம். ஏ. நுஃமான் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்

இக்கால கட்டத்தில் தலைவர்களாக,

| | |
|---|---|
| செல்வன். இங்ரட்ணம் | (1997) |
| ஐ. எம். பர்வீன் | (1999) |
| ஆர். கெமிலே | (2000) |

கடமையாற்ற செயலாளர்களாக,

| | |
|---|---|
| பி.விஸ்வநாதன் | (1997) |
| டி.எஸ்.எஸ். செல்வம் | (1999) |
| இம்ரான் | (2000) |

பணிபுரிந்தனர்.

திருமதி. ஜெ. சிவராஜா பதவி விலகியதை தொடர்ந்து மன்றப் பொறுப்பாசிரியராக திரு. ஆர். பரமேஸ்வரன் 2001ம் ஆண்டு பொறுப்பேற்றார்.

2002ம் ஆண்டு முத்தமிழ் விழாவில் பிரதம அதிதியாக பேராதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் கலந்து சிறப்பித்தார். அப்போதைய அதிபர் பேராசிரியர். பிரகென் ரிஜ் மூன்று ஆண்டுகளுக்கொரு தடவை நடாத்தப்பட்ட முத்தமிழ் விழாவை இரண்டு ஆண்டுகளுக்கொரு தடவை நடாத்த அனுமதியளித்தார்.

2002ம் ஆண்டு நடுப்பகுதியில் திரு. ஆர். பரமேஸ்வரன் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு செல்ல, திரு. என். சுரேஷ் பொறுப்பாசிரியராக கடமையேற்றார். திருமதி. கே.ஜே. பாலசுந்தரம் பணியிலிருந்து ஓய்வு பெற சிற்றவையின் புதிய பொறுப்பாசிரியையாக இரா. சர்மிளாதேவி பொறுப்பேற்றார்.

2004 ஆம் ஆண்டு மன்றப் பொறுப்பாசிரியராக திரு. இரா. சிவலிங்கம் மீண்டும் கடமையேற்றார். தலைவராக ஏ.எம். நிவ்ராஸ் செயலாளராக ஆர். எம். ரிபான், செயல்ப்பட்டனர். அவ்வாண்டில் மன்றம் லபுக்கல மகாவித்தியாலயம் என்னும் பெருந்தோட்டப் பாடசாலைக்கு நூலகம் ஒன்றை அமைத்துக் கொடுத்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இக்கால கட்டத்தில் எமது மாணவர்கள் பாடசாலை மட்ட, மாவட்ட, தேசிய ரீதியில் தமிழ் மொழிப்போட்டிகளில் வெற்றிகளைக் குவித்தனர். றோயல் கல்லூரி நடாத்திய விவாதப் போட்டியில் பி. பரந்தாமன், எஸ். ஸ்ரீகரன், பி. புஸ்பராஜா. என். பிரதீப் ஆகிய மாணவர்களை கொண்ட விவாதக்குழு வெற்றியீட்டியது. பி. பரந்தாமன் சிறந்த விவாதப்பேச்சாளராக தெரிவானார். அகில இலங்கை ரீதியில் நிகழ்த்தப்படும் தமிழ்மொழி தினப்போட்டிகளிலும் வெற்றிகளை குவித்தனர். சக்தி வானொலியில் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் எமது மாணவர்கள இறுதிச் சுற்றுவரை முன்னேறினர்.

2004 ம் ஆண்டு ஆனி மாதம் 30 திகதி மன்றம் தமிழ்மொழி தினத்தை சிறப்பாக கொண்டாடியது. இதன்போது மன்ற தலைவராக எம். எஸ். சகீப் மொகமட் செயலாளராக ஆர். செந்தூரனும் கடமையாற்றினர்.தமிழ்மொழி தின விழாப் போட்டியில் சிங்கள மொழி மூலமான மாணவர்களின் தமிழ் அறிவை வளர்க்கும் விதத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

2005ம் ஆண்டு தமிழ் இலக்கிய மன்றம் ஒரு பொறுப்பாசிரியரின் வழி நடத்தலில் இயக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பொறுப்பாசிரியராக திரு. என். சுரேஷ் நியமிக்கப்பட்டார். இவரும் பொறுப்பில் நீடிக்க விரும்பாமையால் திருமதி. எஸ். இளங்கோ பொறுப்பாசிரியராக கடமையேற்றார்.

2005 இல் முத்தமிழ் விழாவின் பிரதம அதிதியாக Dr. J ஜெயசீலன் கலந்து கொண்டார். இதன்போது மன்ற தலைவராக ஏ.டபிள்யூ. ஷாகமட் செயலாளராக ஏ.ஜே. இந்திரஜித் கடமையாற்றினார்.

2008 இல் திருமதி. மனோகரி மயூரன் புதிய பொறுப்பாசிரியையாக நியமிக்கப்பட்டார். புதிய அதிபர் பிரிகேடிர் உதய ஆரியரத்ன முத்தமிழ் விழாவை ஆண்டு தோறும் நடாத்த அனுமதியளித்தார். அதன் பிரகாரம் முத்தமிழ் விழா 2009, 2010, 2011 ம் ஆண்டுகளில் கோலாகலமாக மேடையேற்றப் பெற்றது. திருமதி. மனோகரி மயூரனின் வழிகாட்டலில் இடம் பெற்ற இவ்விழாக்களின் போது கடமையாற்றிய தலைவர், செயலாளர் விழாவில் கலந்து கொண்ட பிரத அதிதிகளை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பிரதம அதிதி |
|---|---|---|---|
| 2009 | ஆர். ஏ. ஜோன் | ஆர். அபிஷேக் | பேராசிரியர். மா.சே.மூக்கையா |
| 2010 | S. பிரதீப் | S.கிரிஷான் | கலாநிதி வீ. மகேஸ்வரன் |
| 2011 | J. ஆதுரன் | S.பிரதீபன் | பேராசிரியர் செ. சிவயோகநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய மன்ற வரலாற்றில் பல ஆசிரியர்களும் அருட் தந்தைகளும் பலவேறு வழிகளில் ஒத்தாசை நல்கி உள்ளனர்.

அவர்களில் நினைவில் உள்ள சிலரை இங்கு குறிப்பிடலாம்.

அருட்தந்தை - இரட்ணம்
அருட்தந்தை - ரெக்ஸ் ஜோசப்
செல்வி. ஜெயா சிதம்பரம்
திரு. என். சிவகுமாரன்
திரு. விமல்ராஜ்
திரு. ரா. நித்தியானந்தன்
திரு. ஏ. ஆர். ஏ. சலாம்

93 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் தமிழ் இலக்கிய மன்றம் இன்று முத்தமிழ் விழா - 2012 இனைக் கொண்டாடுகிறது.

விரைவில் 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யவுள்ள மன்றம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் புகழ் பூத்து விளங்க வாழ்த்துகிறோம்.

தகவல்கள் பெறப்பட்ட சஞ்சிகைகள்:
கல்லூரி சஞ்சிகைகள் (1919 - 2011)
திரித்துவோதயம் 2003, 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Seated (Left - Right)

Tom Morrison (Programme Co-ordinator), N.P.De. Cruze (Treasurer), M.I.M. Insaf (Vice-President), M.U.M.Humaidh (President), Mrs. M.Mayuran (Teacher-in-charge), Mr. E.G.J. Canagasabey (Vice Principal), Brig. W.G.K. Aryaratne (Principal), Mr. R.Sivalingam (Advisor), R.M. Dhilshan (Secretary), M.S.Shabeer Ahmadh (Secretary), M.S.M. Akram (Editor), A.K.Gowrishankar (Editor)

### Standing (Left - Right)

L.A.Mohan, A.M.M.Musthaq, M.Shamil, K.G.Nadaraja, V.Gobieanandh, V.Prasanna, Reeza Ahamed, M.Z.M. Shazly, P. Udendra, M.K.Rifai, Farhad Khalib.

### Absentees

R.Madushan, P.Praveen Prakash, S.Pradeepan, L.Baskaren, S.Sudarshan, Sri Senthuran, M.N.M.Nafees, M.Nadhan, S.N.Sudarshan, A.V.Moses, A.M.M.Inshaf, M.Mihthaf, Hakeem Shah, J.Suren, G.Lushanth, S.W.Niraj, M.Mukesh, M.Umar.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் இலக்கிய மன்றம் - 2012
செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழு

01. திரு. ஆர். சிவலிங்கம்
02. திரு. ஆர். புஸ்பராஜா
03. திரு. பி. பரமேஸ்வரன்
04. திரு. ஆர். ரசாக்
05. திரு. டி. சிவராஜா
06. திரு. டி.எஸ்.ஆர். ரகுநாதன்
07. திருமதி. பி. விஜயகுமார்
08. திரு. எம்.சுரேஸ்
09. திருமதி. டி. சர்மிளாதேவி
10. திருமதி. எம். மயூரன்
11. திரு.டி.ஜெயகுமார்
12. திருமதி. வி.ரகுநாதன்
13. திருமதி. என். உதயகுமார்
14. திரு.என்.ஸ்ரீகுமரன்
15. திருமதி.பி.ஹேமதிலா
16. செல்வி.ஆர்.எம்.ஏ.சந்திரகுமார்
17. திரு. ஏ.விஸ்ணுவர்தன்
18. செல்வி. எம். சிவஞானம்
19. திரு. ஜி.ஜி. வெற்றபிரவுன்
20. திருமதி. இந்திராணி
21. செல்வி. ஏ. மொரின்
22. செல்வி. மேரி
23. திரு. சுவியான்
24. திரு.வி.ரவீந்திரன்
25. திருமதி.எஸ்.ஐ.வி. பாலேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் ஆசிரியர் குழாம் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள்

| | | கீழ்ப்பிரிவு | இடைப்பிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|---|---|
| 01. | சிறுகதை | தெரிவுசெய்யப்படவில்லை | முதலாமிடம்<br>M.M.A. Salim - 9E<br>2ம், 3ம் இடம் வழங்கப்படவில்லை | முதலிடமிடம்<br>M.S.M.Akeel - 10T<br>இரண்டாமிடம்<br>P. Aswin Sathujan - 10E2<br>மூன்றாமிடம்<br>K.Niroshan - 10E2 |
| 02. | தனியிசை | 1st : I.Abinavan<br>2nd : R.Dhanushkanth<br>3rd : M.Santhosh | 1st : K.Sangeeth<br>2nd : I.Branavan<br>3rd : K.A.Agil | 1st : M.Naveen<br>2nd : R.Pirasanth<br>3rd : K.Niroshan |
| 03. | கட்டுரை | 1st : N.M. Aasique (7E)<br>2nd : M.H.Ushriff Ahamed (6E)<br>3rd : Mohamed Ahnaf Kaleel | 1st : M.M.A.Salim (9E)<br>2nd : P.Harri Prashanna<br>3rd : R.Abilaas | 1st : M.S.M. Akeel - 10T<br>2nd : V.Jadushan<br>3rd : K.J.M.Ashik |
| 04. | உறுப்பெழுத்து | 1st : N.N.M.Rashard<br>2nd : M.H.Ushriff Ahamed (6E)<br>3rd : Isthiauq (6E) | 1st : Yathugash.P (9E)<br>2nd : M.Z.M.Yoosuf (8E)<br>3rd : M.Jaiyskhan (9E) | |
| 05. | கவிதை | 1st : Mohamed Ahnaaf Kaleel (7E)<br>2nd : N.M.Aasique(7) | 1st : K.Sangeeth (9E)<br>2nd : P.Harri Prashanna, Prashanth<br>3rd : R.Arashan (9E) S.Sachinther (9E) | 1st : M.Sasikumar - 10E<br>2nd : P. Aswin Sathujan 10E<br>3rd : R.M. Hussamul Hassan 10E V.Yadushan 10T |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| 06. | குழு இசை | | I.Branavan<br>M.Vikash<br>K.A.Agil<br>L.K.Dhanushan<br>N.Krishanthan<br>R.Abilaas | S.Sachinther<br>K.Sangeeth<br>Harri Prasanna.P.<br>Kuganthan.R.<br>Arshan.R.<br>Tharatharan | Santhash .M.<br>Naren Dranath.A.<br>N.Divyan<br>I.Abinavan<br>M.Venush<br>D.Rahul |
| 07. | பேச்சு | 1st :<br>2nd : | Santhosh .M.<br>M.Venush | 1st : K.Aathithan<br>2nd : P.Sivanjan<br>3rd : R.Dharshan | 1st : H.Yuvajar<br>2nd : S.C.Anthony<br>3rd :R.Nidhurshan |
| 08. | விவாதம் | | 1st | 2nd | 3rd |
| | | | M.Sasikumar<br>K.Niroshan<br>P.Prasanth<br>P.Aswin Sathujan | M.Naveen<br>Akeel. M.S.M.<br>Krishanth<br>Hamidh | Jashad<br>Chery<br>J.Yogewaran<br>Daniel Krishanthan .S. |

சிறந்த விவாதி : அஸ்வின் சதுஜன் .P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளர் அறிக்கை ....................

திரித்துவக் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தின் 93 ஆவது முத்தமிழ் விழாவை கொண்டாடும் இத்தருணத்தில், திரித்துவோதய சஞ்சிகையின் செயலாளர் அறிக்கையை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

2011ம் ஆண்டில் பொறுப்பாசிரியை திருமதி. மனோகரி மயூரன் அவர்களின் தலைமையின் கீழ் தமிழ் இலக்கிய மன்றத்தின் புதிய செயற்குழு நியமிக்கப்பட்டது. இச் செயற்குழுவின் தலைவராக M.U.M ஹுமைட், செயலாளராக R. டில்ஷான் , உபதலைவராக M.I.M இன்ஷாப், உபசெயலாளர் M.S. சபீர் அஹமட், பொருளாளர்களாக பிரவீன், பிரவீன் பிரகாஷ் மற்றும் G. லுஷாந்த், இதழாசிரியர்களாக M.S.M அக்ரம் மற்றும் R.மதுஷான் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

போதியளவு நேரமில்லை காரணமாக எங்களால் ஆக்கப்பூர்வமாக செயற்பட முடிவில்லை. மேலும் எமது பரீட்சைக்கு இன்னும் சில காலங்களே உள்ளவேளையின் அனைத்து மாணவர்களையும் ஒருங்கினைத்து செயற்படுவது கடினமானதாக இருந்தது. இருப்பினும் எமது தமிழ் இலக்கிய மன்ற பொறுப்பாசிரியையின் சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் வெற்றிகரமாக செயற்படமுடிந்தது.

இதன் முதற்கட்டமாக எமது செயற்குழு, பொறுப்பாசிரியை மற்றும் பெற்றோர்களுடன் கல்லூரி நிர்வாகத்தினரிடடும் கலந்தாலோசித்து எமது முத்தமிழ் விழாவை மாசி மாதம் 17ஆம் திகதி நடாத்துவது என தீர்மானிப்பட்டது. எமது பாடசாலை மட்டத்திற்குள் தமிழ் தினபோட்டிகளை வெற்றிகரமாக நடாத்தி எமது முத்தமிழ் விழாவுக்கு மேலும் மெருகூட்ட முடிந்தது. இப்போட்டிகளின் போது எமக்கு நடுவர்களாக உதவி புரிந்த ஆசிரியைகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துகொள்கின்றேன்

முத்தமிழ் விழாவுக்காக எமது பாடசாலையின் வெவ்வேறு வகுப்பு மாணவர்களால் வெவ்வேறு விதமான கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. இவ்வாறு எமது 93ஆவது முத்தமிழ் விழா வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

**ஆர். எம். தில்ஷான்**
**செயலாளர்**
**தமிழ் இலக்கிய மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Acknowledgment

1. Dr.P.Saravanakumar
2. Brig. W.G.K.Ariyaratne
3. Mr.E.G.J.Canagasabey
4. Mrs. M.Mayuran
5. Members of the Staff.
6. 76-79 Tamil medium Batch Mates.
7. Mr.Uwais
8. Mrs.Munawwara
9. Mr & Mrs. Rajeswaran
10. Palayakats (Mr. Sivasubramaniam)
11. Mr. Shafie
12. Mr.Rizni
13. Mr. Gowryshankar
14. Mr. Mohan
15. Mr. Mohan lal
16. Mr. Aruliah
17. Mr. Vigneswaran
18. Mr.Nadarajah
19. Biofoods (pvt) Ltd. (Dr. Sarath Ranaweera)
20. Hairu Engineering Consultancy (Eng.Hairu)
21. Sri Haran Hardware (Mr.Kirubakaran)
22. Ranmuthu Jewellers (Mr. Rajaratnam)
23. Parents of all Tamil Students
24. Wellwishers
25. Mr & Mrs. Rajaratnam
26. Mr. Zakir Hussain



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ANNEXURE

### TAMIL LITERARY UNION

- The first ever TLU committee in 1919.

| | | |
|---|---|---|
| President | : | Mr. A.M.K. Cumaraswamy |
| Vice Presidents | : | Mr.J.David |
| | | Mr.J.N.Thomas. |
| Secretary | : | Mr. A.M.Handy |
| Asst. Secretary | : | Mr. M.P.Ponnuchamy. |
| Treasurer | : | Mr. J.T.Roberts. |
| Asst. Treasurer | : | Mr. T.Carthigaser. |

### தமிழ் இலக்கிய மன்றம்

- 1919ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய மன்றச் செயற்குழு.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.A.M.K.குமாரஸ்வாமி |
| உப தலைவர் | : | திரு.J.டேவிட் |
| | . | திரு. J.N.தோமஸ் |
| செயலாளர் | : | திரு. A.M.ஹென்டி |
| துணைச் செயளாலர் | : | திரு. M.P.பொன்னுச்சாமி |
| பொருலாளர் | : | திரு. J.T.ரொபட்ஸ் |
| உதவி பொருலாளர் | : | திரு. T.கதிரேஸர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org